உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை

இயற்றிய

தேவையுலா.

இது

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க் காலேஜ் பிரின்ஸ்பாலாகிய

மஹாமஹோபாத்தியாய

உ. வே. சாமிநாதையரால்

பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன்

சென்னை:

கமர்ஷியல் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

குரோதன ௵ ஆனி௴

1925.

இரண்டாம் பதிப்பு.

விலை அணா 4.

(Copyright Registered.)

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF MADRAS, MADRAS.
சிவ. சாம்பசிவ சர்ம
R. S. Sambasiva Sarma
2163
894.811

தேவாரம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடலிடை மலைக டம்மா லடைத்துமால் கரும முற்றித்
திடலிடைச் செய்த கோயி றிருவிரா மேச்சு ரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற் சுழல்கின்றேன் றூய்மை யின்றி
யுடலிடை நின்றும் பேரா வைவராட் டுண்டு நானே.

தேவையுலா என்பது, இராமேசுவரத்துத் திருக்கோயில்கொண் டெழுந்தருளிய **ஸ்ரீ இராமநாதர்**மீது பலபட்டடைச் **சொக்கநாத பிள்ளை**யால் இயற்றப்பெற்றது; தேவை - இராமேசுவரம்; இது பாண்டி நாட்டிலுள்ள பாடல்பெற்ற பதினான்கு சிவஸ்தலங்களுள் ஒன்று.

உலாவென்பது தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று; பேதை முதலிய எழுவகைப் பருவமகளிர்களும் தன்னைக்கண்டு காதல் கூரும்படி ஒருதலைவன் வீதியிற் பவனி போந்தானென்று அவனுடைய அரிய செயல்களைப் பலவகையாகப் புலப்படுத்திக் கலிவெண்பாவாற் பாடவேண்டுமென்பது அந்நூலுக்குரிய விதி; வீதியென்றது இங்கே உருத்திரகணிகையருடைய தெருக்களை.

இந்நூலால், ஸ்ரீ இராமநாதருடைய பெருங்கருணைத்திறமும் இராமேசுவரத் தலவிசேடங்களும் தீர்த்தவிசேடங்கள் முதலியனவும் வேறு தலபுராண கதைகளும் பழைய சிவபுராணங்களிற் காணப்படும் அரியசரித்திரங்களும் நாயன்மார்களுடைய அருமைச்செயல்களும் பலமுகமாக அவ்வவ்விடத்து அறியலாகும். பொருளை எளிதில் விளக்கும் மடக்கு சிலேடை முதலிய சொல்லணிகளும், முக்கியமான பொருளணிகளும், கேட்போர்களை விரைவில் வியப்பிக்கும் தொனிகளும் இதிற் பரக்கக்காணலாம். அன்றியும், இத்தலத்தில் உள்ள ஆரியர் ஐந்நூற்றுப்பன்னிருவர் என்பது ௬௪ - ஆம் கண்

ணியாலும், பண்டைக்காலத்தில் இத்தலத்தில் இன்ன இன்ன திருப்பணிகள் இன்னாரின்னாராற் செய்விக்கப்பெற்றனவென்பது கூஎ - ஆம் கண்ணி முதலியவற்றாலும், இரகுநாதஸேதுபதி கட்டுவித்த மண்டபம் ஒன்றில் உத்ஸவகாலத்தில் இராமநாதர் எழுந்தருளினரென்பது சுஈ - ஆம் கண்ணியாலும், திருத்தேர் சேதுபதிகளாற் செய்விக்கப்பெற்றதென்பது கoஅ - ஆம் கண்ணியாலும், இராமநாதருக்குச் சாத்திய திருவாடை விஜயரகுநாதஸேதுபதியால் அளிக்கப்பெற்றதென்பது கூஎ - ஆம் கண்ணியாலும், அவர் திருத்தேர் வடமுகூர்த்தம் செய்தனரென்பது கஙஅ - ஆம் கண்ணியாலும் விளங்குகின்றன. இன்னும் இங்ஙனம் விளங்குவன பல.

இந்நூலாசிரியர், கவிராயரென்றும் புலவரென்றும் வழங்கப்பெறுவர். இவருடைய வாக்கின் பெருமை இத்தமிழ்நாட்டில் யாவருக்குந் தெரிந்ததாதலால், அதைப்பற்றி இங்கே ஒன்றும் எழுதத் துணிந்திலேன்.

திருத்தேர் வடமுகூர்த்தம் செய்தவர் விஜயரகுநாதஸேதுபதி என்று கூறியிருத்தலால் அவர் காலமும் இந்நூலாசிரியர் காலமும் ஒன்றென்பதும் இந்நூலை இயற்றுவித்தவர் அவரென்பதும் விளங்குகின்றன.

பண்டைத் தமிழ்நூல்களிற் காணப்படாத ஒருவகைச்சொற்கள் இந்நூலிற் சிலவிடத்து வந்துள்ளன; இடத்துக்கேற்ற சிறப்புள்ளனவென்று கருதி அவை பெரியவர்களால் அக்காலத்து அங்கீகரிக்கப்பெற்றனபோலும்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய ருo - வருடங்களுக்கு முன்பு அன்பர்களுடன் நான் சேதுபுராணத்திற் பாலோடைச் சருக்கத்திற்குப் பொருள் கேட்டுக்கொண்டிருந்தபொழுது திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், "மேலான கத்துருவின் வீழ்சலதோ டந்தணிக்கப், பாலாவியாகிய பாலோடையும்" (கண்ணி-ஙக) என்பதைக்கூறி, அதிலுள்ள 'சலதோடம்', 'பாலாவி' என்பவற்றைப் பலபடப் பாராட்டி, "இது தேவையுலா" என்றும், "இதில் உச - தீர்த்தங்களும் இப்படியே ஒவ்வொரு நயம்படக் கூறப்பெற்றுள்ளன" என்றும் சொன்னார்கள். அதுவே இந்நூலைத்தேடி ஆராய்ச்சிசெய்யும்படி பண்ணுவித்தது.

இந்நூலின் முதற்பதிப்புக்குத் திருவாவடுதுறை யாதீனத்தலைவர்களாகிய ஸ்ரீமத் அம்பலவாணதேசிகரவர்கள் அளித்த பிரதியும், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரதியும், மேலகரம் ஸ்ரீ திரிகூடராசப்பக்கவிராயரவர்கள் வாங்கித்தந்த பிரதியும், இரண்டாம் பதிப்புக்கு வேறு சில பிரதிகளும் உபயோகமாக இருந்தன.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராஸனாதிபதியாக விளங்கிய ஸ்ரீமான்: பொ. பாண்டித்துரைஸாமித்தேவரவர்கள் விரும்பியபடி இதனைச் செந்தமிழ்ப் பிரசுரம், கக - ஆவதாக முதன்முறை 1907-ஆம் வருஷத்தில் வெளியிடலானேன்.

அச்சுப்பிரதிகள் இப்போது இல்லாமையாலும் மறுபடி வெளியிடவேண்டுமென்று சில அன்பர்கள் தூண்டினமையாலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் அனுமதிபெற்று இப்போது இரண்டாமுறை பதிப்பிக்கலானேன்.

இப்பதிப்பில், சில இடங்களில், மூலம் சிற்சில திருத்தங்களையடைந்திருப்பதன்றி, குறிப்புரைகளும் ஆங்காங்கு அதிகமாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

சிதம்பரம், 10—7—25.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

2163

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை இயற்றிய

தேவையுலா.

காப்பு.

ஆதியுலாக் கொண்ட வமலனிரா மேசன்மேற்
சோதியுலாத் தேவையுலாச் சொல்லவே - காதலாம்
தந்தத்தொந் தித்தந்தித் தாவென்று டுஞ்சிவன்சேய்
தந்தத்தொந் தித்தந்தித் தாள்.

நூல்.

௧. நீர்கொண்ட மேக நிறங்கொண்ட மால்கமலப்
போர்கொண்ட கண்மலராற் பூசித்தும் - சீர்கொண்
௨. டேமன் னியுவி னுபதேசம் பெற்றுஞ்
செபமன் னியபூசை செய்தும் - இபமென்ன
௩. வந்து பிறந்த மதலையைச் சாம்பனென
இந்துகுலத் தொன்றுபெய ரிட்டழைத்தும் - வெந்துயரை
௪. மேன்மாற் றும் வில்வோத கேச்சுர லிங்கத்தை
ஆன்மார்த்த பூசையா வர்ச்சித்தும் - நான்மறையின்

குறிப்புரை.

காப்பு.

ஆதியுலா - சேரமான்பெருமாள்நாயனுர் அருளியஉலா. தேவை - இராமேசுவரம்; நூலின் ௧௯, ௧௨௧, ௨௨௬, ௨௪௮, ௩௩௮, ௩௬0-ஆம் கண்ணிகளிற் காண்க. மூன்றுமடியில், 'தந்த' என்பது முதலியன தாளவொற்றுக்கள். சொல்லத் தாள் காதலாமென்க.

நூல்.

௧. மால் எழுவாய்.

௨. உபதேசம்பெற்றதை, கூர்மபுராணம், பூர்வகாண்டம், ௩௧-ஆம் அத்தியாயத்திற்காண்க. செபம் - ஜபம்.

௩. மதலையை - சாம்பவதியின் பிள்ளையை. சாம்பனென்பது சிவபெருமானுடைய திருநாமம். ஒன்றுபெயர்-ஒருபெயர்; "ஒன்றுதேரினன்" சீவக.

௪. வில்வோதகேச்சுரம்—ஒருசிவஸ்தலம். ஸ்ரீகண்ணபிரான், நரகாசுரனைக்கொன்று தேவலோகஞ்சென்று பாரிசாததருவை அபகரித்தபின்பு பாரியாத்திரமலையையடைந்து, அதற்கு வரங்கொடுத்துவிட்டுத் தாம் நினைத்தமாத்திரத்தில் வந்த கங்கையில் ஸ்நாநம் செய்து, கங்காதீர்த்தமும் வில்வமும்

௫. வேர்பெற்ற வீதி விடங்கரைப் பாற்கடலின்
மார்பிற் சுமர்ந்து வணங்கியும் - நேர்பெற்ற

௬. தொண்டு புரியுந் தொழும்பெலா நாளுநங்
கண்டு புரியுங் கருணையால் - அண்டருல

௭. கின்னு நடுங்கு மிராவணனைக் கொன்றபழி
தன்னை யகற்ற றலைக்கிடா - என்னையோர்

௮. பல்லா யிரவர் படைத்த மலமாதி
யெல்லா விருளு மினிதகற்றத் - தொல்லைநாட்

உச - தீர்த்தங்கள்.

௯. கால வரையடைந்துங் கால வரையடையாச்
சீல முடையசக்ர தீர்த்தமும் - கோலவரைப்

௧௦. பேதையொரு பாகன்போற் பேயுட னேயாடும்
வேதாள தீர்த்தமெனு மென்புனலும் - பூதலத்து

௧௧. வாவுந் திடமதிக்கு வந்த மறுத்துடைத்த
பாவ விநாசப் பசுந்தடமும் – ஆவலாற்

௧௨. சீதைதரும் பட்டத்தாற் றேவேந் திரப்பட்டங்
கோதகன்ற தாஞ்சீதா குண்டமும் - நீதிபோய்த்

௧௩. தேயமிழந் தோனிழந்த தேர்பரியெ லாங்கவந்த
வாயி லுதிப்பித்த மங்கலமும் - நேயத்தால்

வைத்து அவற்றிற்சிவபிரானை ஆவர்ஹனஞ்செய்து, தாம் கொணர்ந்த பாரிசாத மலர்களால் அருச்சனைபுரிந்து துதித்ததனுல் அவ்விடம் வில்வோதகேசுவர மென்று திருநாமம் பெற்றது. இது, பாரதம், ஹரிவம்சம், விஷ்ணுபர்வம், எ௫-ஆம் அத்தியாயத்திற்கண்டது.

௫. வீதிவிடங்கர் - திருவாரூர்த்தியாகராசர். [சொல்.

௭. தலைக்கிடு - வியாஜம். என்னை - என்னவியப்பு ; ஓர், இடைச்

௯. காலவரை - காலவமுனிவரை, கால எல்லை. சக்கரதீர்த்தமுதலிய உச - தீர்த்தங்களின் விசேடங்களையும் ஆடிப்பேறுபெற்றோர் இன்னார் என்பதையும் சேதுபுராணத்துள்ள சக்கரதீர்த்தச்சருக்க முதலியவற்றால் முறையே அறிந்துகொள்க. நூலாசிரியர், ஒவ்வொரு நயம் புலப்பட உச - தீர்த்தங்களையும் முறையே கூறியிருக்கும் அழகு கூர்ந்துஉணர்ந்து இன்புறற்பாலது.

௧௦. பேதையொருபாகன்போல்-சிவபெருமான் பேயோடாடுதல் போல. பேய் - சுதர்சனனாகிய பேய்.

௧௧. திடமதி - ஒருவன் பெயர். மறு - அவனடைந்த பாவம்; சந்திரற்குள்ள களங்கமென்பது மற்றொருபொருள். [ஹத்திதோஷம்.

௧௨. பட்டம்-குளம், பதவி. கோது-இந்திரனைச் சார்ந்திருந்த பிரஹ்ம

௧௩. தேயமிழந்தோன் - மனோசவனென்னும் அரசன். கவந்தம்-நீர், தலைபோனஉடம்பு; தலைபோன உடம்பிலிருந்து தேர்முதலியவை தோற்றின

கச. ஏத்திய நல்லோரை யேகாந்த ராமன்பாற்
சேர்த்து விடுமமுத தீர்த்தமும் - பூத்தமலர்ப்

கரு. வீட்டிலுறை வேதாவை மிக்கமக வானாகக்
கூட்டி யருள்பிரம குண்டமும் - வாட்டமுறு

கசு. நொய்யமனத் தன்மசக னூறுமக வானாகச்
செய்யு மனுமகுண்ட தீர்த்தமும் - ஐயமற

கஎ. மானத வாவிவடி வாய்த்தெய்வ யானைதனை
யீனு மகத்தியனா ரேல்வையும் - மேனாளில்

கஅ. மெய்கழுவ வந்த விசயன் றமையனுக்குப்
பொய்கழுவி ராமர்திருப் பொய்கையும் - தெய்வதங்கள்

கக. வாழு மொருதேவை வந்து பலதேவர்
தாழு மிலக்குமணர் தண்புனலும் - சூழுலகிற்

வென்பது மற்றொருபொருள். இதிலுள்ளவரலாறு, சேதுபுராணம், மங்கல தீர்த்தச்சருக்கத்தாலறியலாகும்.

கச. 'ஏகாந்தராமம்' என்பது இராமேசுவரத்திலுள்ள ஓரிடம்; இராமர் இராவண சங்காரத்திற்குரிய காரியங்களைப் பலருடன் ஆலோசித்துக்கொண்டிருக்கையிற் கடல்முழக்கம் ஒருவர்பேசியது ஒருவர்க்குக் கேளாமலிருக்கும்படி செய்தமையின் அவர் கோபிக்க, உடனே கடல் ஓசையின்றி அடங்கியதனால், அவ்விடத்திற்கு ஏகாந்தராமமென்றும், ஏகாந்தராமநகரம் என்றும் அங்கு எழுந்தருளியிருக்கும் இராமபிரானுக்கு ஏகாந்தராமனென்றும் பெயர்கள் உண்டாயின; "மாயோ னடக்கும், நெடுங்கடல் போலடங்கி நிற்க" என்றும், "இமைக்கும் கடலேழி லேகாந்த ராமன், அமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர்" என்றும் பின் வருதல் காண்க; கக, ருகஎ.

கரு. வேதா - பிரமர். மகவான் - யாகத்தையுடையவன், இந்திரன், பிரமதேவரை இந்திரனாகச் செய்ததென்பது மற்றொருபொருள்.

கசு. தன்மசகன் - தருமசகன்; இவன் ஓரரசன். நூறுமகவான்-நூறு பிள்ளைகளையுடையவன், இந்திரன்; தருமசகனென்னுமொருவனை இந்திரனாகச் செய்ததென்பது மற்றொருபொருள்.

கஎ. மானதவாவி - கைலை அல்லது இமயமலையிலுள்ள ஒரு தெய்வப் பொய்கை. தெய்வயானை - கக்ஷீவானென்பவனைத் தாங்குதற்பொருட்டுச் சிவாஞ்ஞையால் தோன்றியயானை. ஏல்வை - குளம்; "மதிக்கு மகத்தியனார் வாவிவந்த வேழத், துதிக்கை யனைய துடையாள்" என்பர் பின்னும்; உஉஉ.

கஅ. மெய் - உடம்பு. விசயன் தமையன் - தருமபுத்திரர். பொய் - துரோணாசாரியர் இறக்கும்படி கூறிய பொய்ம்மொழி. கழுவல் - நீக்கல். மெய்கழுவவந்தவனுக்குப் பொய்யைக்கழுவியதென்பது குறிப்புப்பொருள்.

கக. தேவை - இராமேசுவரம். பலதேவர் - பலராமர். ஒருதேவைப் பலதேவர்கள் வணங்கினர்களென்பது மற்றொருபொருள்.

௨0. காந்திவருங் கூட்டைக் கழுவச் சுகமழுக்குத்
தீர்ந்து விடுசடா தீர்த்தமுஞ் - சாந்தமலர்

௨க. கூற்றன் மகனைக் குபேரன் மகனாகத்
தேற்று மிலக்குமி தீர்த்தமும் - நாற்றிசையும்

௨௨. போய்முளைக்குஞ் சீதைபழி போக்குதற்காத் தண்ணீரிற்
றீமுளைக்கு மக்கினி தீர்த்தமும் - பூமியிலே

௨௩. தங்குமறை யான்றுளுந் தந்துவிசும் பின்மறையான்
செங்கையு நல்குசக்ர தீர்த்தமும் - பங்கயத்தோன்

௨௪. மாலை முடியறுக்க வந்த பிரமகத்திக்
காலை யறுத்தசிவ கங்கையும் - வேலையெனப்

௨௫. பொங்குநீர்க் குள்ளே புழுங்கினேன் வெம்மையொரு
சங்கநீர் தீர்த்தசங்க தீர்த்தமும் - பங்கொருவன்

௨௬. ஒப்பரிய வையத்தி லோடிவந்து முந்நீரைச்
செப்பமுற நீந்தியமுத் தீர்த்தமும் - இப்புவியின்

௨௭. மாமிக்காய் மாமன்போய் மாமனைக் கொன்றபழி
சேமித் திடாக்கோடி தீர்த்தமும் - காமத்தால்

---

௨0. கூடு - உடம்பு. சுகம் - சுகமுனிவர். அழுக்கு - மனமாசு; கூட்டைக்கழுவக் கிளி அழுக்குத்தீர்ந்ததென்பது மற்றொரு பொருள்; "நீடு சடா, தீர்த்த மொருசுகத தின் சென்மந் துடைத் தமைகேட், டார்த்தசுகமெல் லா மடைந்ததென" என்பர் பின்னும்; ககடு - சு.

௨க. கூற்றன் மகன் - தருமபுத்திரர். குபேரன் மகனாக - பெருஞ்செல் வமுடையவனாக. யமன் பிள்ளையைக் குபேரன்பிள்ளையாக்கியதென்பது மற் றொன்று. [தீமுளைத்ததென்றது வியப்பு.

௨௨. தீயில் தண்ணீர்தோன்றுவது முறையாக இருப்பத் தண்ணீரில்

௨௨ - ௩. பூமியிலே தங்குமறையான் - ஹரிஹரனென்னும் அந்தணன். விசும்பில் மறையான்-சூரியன். முன்னர்க்கூறிய சக்கரதீர்த்தம் வேறு, இது வேறு. மறையானென்பது சிலேடை. [மகத்தியினது அடியை.

௨௪. மாலைமுடி - மாலையையணிந்த தலை. அறுக்க-அறுத்தலால். பிர

௨௫. நீர்க்குள்ளே புழுங்கினேன்-வற்சநாபமுனிவர். புழுக்கம்-நன்றி மறந்தோமேயென்னுமனவெப்பம். பெருவெள்ளத்தினுள்ளே முழுகியும் தீராத வெப்பம் ஒரு சங்கு நீராலே தீர்ந்ததென்பது மற்றொருபொருள்.

௨௫ - ௬. பங்கு ஒருவன்-முடவனாகிய இரயிக்குவ முனிவன். வையம்- வண்டி. முந்நீர் - கங்கை யமுனை கயையென்னுமூன்று தீர்த்தங்கள்; காலில் லாதவன் பூமியில் ஓடிவந்து கடலை நீந்தினனென்பது மற்றொருபொருள்.

௨௭. மா மிக்காய் - பெருமை மிகுந்து. மாமன் - திருமகள் கணவராகிய கண்ணபிரான்; மாமனைக் கொன்ற - தம்முடைய அம்மானாகிய கஞ்சனைக் கொன்ற. சேமித்திடா - பாதுகாவாது தொலைத்த.

உஅ. ஓசைநீர் தோய்ந்தோற் குருப்பசியின் வேதனைகள்
மோசனமாஞ் சாத்யா முதநீரும் - பேசொருவன்

உகூ. வெண்மை யிரைக்கழுவ மிக்க கருமயிராந்
திண்மை பெறுஞ்சருவ தீர்த்தமும் - வண்மையினுற்

௩0. ருனே யரியையுஞ் சம்புவையும் விண்ணவர்தங்
கோனுகச் செய்ததனுக் கோடியும் - மாநிலத்தின்

௩க. மேலான கத்துருவின் வீழ்சலதோ டந்தணிக்கப்
பாலாவி யாகியபா லோடையும் - மேலான

௩உ. நாணுருவா மம்புருவ நங்கை சிலையுருவின்
கோண லொழித்தகவி குண்டமும் - காண

௩௩. அரிதலை தன்னை யயனுடலிற் சேர்க்குஞ்
சரசுவதி காயத்ரி தாமும் - பிரச

௩௪. மொழுகுஞ் சுனைகளா வோங்குபுகழ்த் தேவை
முழுது மொருபழமா முன்னேர் - தொழுதிறைஞ்சுஞ்

௩௫. சேதுப் பலாமரமாச் சேதுப் பலாமரத்தின்
மீதிற் பழுத்த வியன்கனியின் - கோதற்ற

௩௬. வான்பே ரமுதென்றுல் வாய்கசக்கத் தித்திக்குந்
தேன்போ னிறைந்த சிவக்கொழுந்து - மான்போர்வாள்

உஅ. நீர்தோய்ந்தோன் - புநூரவா. உருப்பசி-ஊர்வசி; நீராடியவனுக்கு அச்சத்தைத்தரும் பெரும்பசி தீர்ந்ததென்பது குறிப்புப்பொருள். ஒருவன் - சுதரிசனனென்னும் அந்தணன்.

உகூ. திண்மை - இளமைப்பருவம்.

௩0. அரி - குரங்கு. சம்பு - நரி. சேது புராணம், கவிசம்புச் சருக்கம்பார்க்க. திருமாலையும் உருத்திரரையும் இந்திரனுகச்செய்ததென்பது குறிப்புப்பொருள்.

௩க. சலதோடம் - வஞ்சனையாலுளதாகிய பாவம்; அது வினதையை அடிமையாக்கியது. பாலாவி - பால்வேது. ஜலதோஷத்தைத்தணித்தற்கு இது பாலாவியாயிற்றென்பது மற்றெருபொருள். பாலோடை - ஒருதீர்த்தம்.

௩உ. நாண் - நாணம். அம்புருவம் - அழகிய புருவம். நங்கை - அரம்பை. சிலையுருவம் - கல்வடிவம். கவிகுண்டம் - கவிதீர்த்தம். நாணி, அம்பு, வில் இவற்றின் வடிவங்களென்பது மற்றென்று. கோணல் - மாறுபாடு.

௩௩. அரிதலை - அரிந்ததலை. திருமாலின் தலையைப் பிரமருடைய உடலிற்சேர்த்ததென்பது ஒன்று.

௩௪. பழம் - பலாப்பழம்.

௩௫ - ௬. கனியின் தேன்போல் நிறைந்தவென்க. மானும் போருக்குரிய வாளும்.

௩௭. மச்சமயில் போற்கண் மலைவளருங் காதலியாம்
பச்சைமயில் வாழ்செம் பவளமலை - நிச்சயமாய்க்

௩௮. காவையு மிந்த்ர புரத்தையுங் கானனமுந்
தேவையு மாகத் திருத்தினேன் - மேவுந்

௩௯. திருக்கந்த மாதனத்திற் சென்றேறு நாடொட்
டிருக்கந்த மாதனமா வேறான் - வெருக்கொள்ளு

௪0. முங்கார கால வயிரவனு மோங்கார
சங்கார காலனையுந் தாபித்தோன் - பொங்குபெயர்க்

௪௧. காவலுறுஞ் சேதுவந்த மாகாளி யம்மையருட்
காவல் புரியுங் கடிநகரான் - தேவர்கோன்

௪௨. வேதனைசெய் கால்விலங்கை விட்டோட்டு வோன்சேது
மாதவன் கால்விலங்கை மாற்றுதான் - மோதி

௪௩. எறிகடலைத் தாண்ட வெழுந்தவனு மானை
மறிகடலை யென்றெதிரே வைத்தோன் - உறுபுலியாற்

௪௪. கோவணு கலிங்கமன்றிக் கொட்டுணையும் பட்டோன்
வாலுக லிங்க வடிவினான் - மேலா

௪௫. மவனசை யாம லணுவசை யாமை
பவனனு மாருதியும் பார்த்தோன் - அவனையுமை

---

௩௭. மச்சம் அயில் - மீனும் வேலும். மலைவளர்காதலி - அம்பிகையின் திருநாமம்; காதலியென்றும் வழங்கும்; "காதலிதேர்" என்பர்பின்; ௧0௮. மலைக்கு மயில் உரியது.

௩௮. நிரனிறை.

௩௯. திருக்கந்தமாதனம் - ஒருமலை; இஃது இராமநாதர் எழுந்தருளியிருக்குமிடம்; "கந்த மாதனத்திலருச்சித் தேத்து, மேந்துபுனற் சடிலமுடியிராமநாதன்" என்பதனாலுணர்க; சேதுபுராணம், கடவுள். உ. இருக்கு அந்தம் - வேதத்தின் உச்சி. [புகழுக்கு.

௪0. உங்காரகாலவைரவரென்பது ஸ்தலவைரவர் திருநாமம். பெயர்க்கு-

௪௧. சேதுவந்தமாகாளி - சேதுபந்தமாகாளி; ஸ்தலதேவதை.

௪௨. சேது மாதவருடைய கால் விலங்கை மாற்றுமை, சேதுபுராணம், சேதுமாதவச் சருக்கத்தால் அறியலாகும். ௪௩. கடலை மறிப்பாய்.

௪௪. கோவணு கலிங்கம் - சுற்றப்பட்ட ஆடை. கொட்டுள் ளையும். வாலுகலிங்கம் - மணலாகிய சிவலிங்கப் பெருமான்; என்றது இராமநாதருடைய திருமேனியை. 'மாதவர் வகுத்த வேலை வந்தது சிறுப்பாய் வல்லை, சீதைவாலுகத்தாற் செய்த சிவனருட் குறியை யென்றார்'' என்பதனாலுமுணர்க; சேதுபுராணம், இராமனருச்சனை. ௮௫.

௪௫. அகங்காரமுற்றிருந்த பலதேவர்களுக்குமுன்பு இயக்கவடிவங் கொண்டுசென்ற சிவபெருமான் நாட்டியதுரும்பை அசைத்தற்கு வாயுதேவன்,

௪௬. தானுளத் தான்வந் தெமையாள நாமெல்லாம்
வானோரை யாளவந்த வானோரும் - ஏனோரைப்

௪௭. பூதலமீ தாளப் புரியுங் கருணையான்
பாதலமே யாபரணப் பையானோன் - வேதனூர்

௪௮. சென்னி தனக்குத் திருக்கை மலர்வீடும்
அன்னமு நல்கு மருளாளன் - சென்னி

௪௯. மதியார்க்குந் தாள்பணியும் மார்க்கண்டே யர்க்கு
முதயாத் தமன மொழித்தோன் - கதிரவற்கும்

௫௦. சண்டைப் படுமிருட்குந் தக்கன் செயுமோம
குண்டத்தின் முன்னுறவு கூட்டினோன் - புண்டரிகக்

௫௧. கண்ணினன் கண்களுக்குங் காட்டாத பொற்பாதங்
கண்ணிலா வந்தகற்குங் காட்டினோன் - கண்ணின்

வலியில்லாதனமையும், எடுத்துவிடுவதற்காக இராமலிங்கத்தை அனுமார் பல முறை அசைத்துப்பார்க்கவும் அஃது அசையாதிருந்தமையும் அறியற்பாலன; கந்தபுராணம், காமதகனச்சருக்கம், ௭௧; சேதுபுராணம், இராமனருச்சனைச் சருக்கம், ௧௫௧; "எல்லா வுயிர்க்கு முயிரருணேச ரிவரசைவி, னல்லா தணுவு மசையாத தென்பதறிந்தனமே, வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்த வந்நாட், புல்லாதிருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" (அருணைக்கலம்பகம், ௩), "அவனன்றி யோரணுவு மசையாது" (தாயுமானவர்) என்பவை இங்கே அறியற்பாலன.

௪௭. ஆபரணம் பாம்புகளானமையின் பாதலம் ஆபரணப் பையாயிற்று.

௪௮. அன்னம் - பிக்ஷான்னம். பிரமருக்குக் கொடுத்திருந்ததன்றி அவர்தலைக்கும் பதுமாஸனம், அன்னவாகனம் கொடுத்தருளினரென்பது மற்றொரு பொருள்.

௪௯. மதியார்-சந்திரன். உதயாத்தமனமொழித்தது, ஒரேவிதமாக இருக்கும்படிசெய்தது; "கருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடப்பவுநின், திருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே" என்றார்; அருணைக்கலம்பகம், ௧. மதியாதவர், மதிப்பவரென்னும் இருதிறத்தாரையும் ஒப்பநினைத்து நடத்துபவரென்பது மற்றொருபொருள்.

௫௦. உறவு கூட்டல் - சூரியன் இருளை அறியும்படி செய்தல்; கண்போனமையின் அவன் இருளை அறிந்தான்; "சிறுவிதி யாகத்திற் றினகரற்கு முன்னங், குறுகியிருள் கூடவைத்த கோமான்" (திருவிடைமருதூருலா, ௧௨) என்பதிலும் இக்கருத்து அமைந்துள்ளது.

௫௦ - ௫௧. புண்டரிகக் கண்ணினன்-திருமால். கண்ணிலா அந்தகன்-கண்ணோட்டமில்லாத யமன். காட்டியது - மார்பிலுதைத்தது. நல்லகண்ணுடையானுக்குத் தோற்றாதபாதம் குருடனுக்குத்தோற்றியதென்பது மற்றொருபொருள். "மேலு மறிந்தில னான்முகன் மேற்சென்று கீழிடந்து, மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும், பாலன் மிசைச்சென்று பாசம்விசிறி மறிந்த சிந்தைக், கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே" தேவாரம்.

௫௨. கடைக்கு விடயமன்றிக் கார்முதலை யென்று
விடைக்கு விடைகொடுக்கும் வேந்தன் - இடைக்குலத்துப்

௫௩. பூவையர் தாள்பணியப் போகாமல் விண்ணவர்க்குச்
சேவை கொடுத்தருளச் செல்கொடியான் - மூவிலா

௫௪. மாரூப வில்வேண் மலர்தூவக் கண்பார்த்துச்
சாரூபந் தந்தருளுந் தம்பிரான் - வீரப்

௫௫. புலிபோல வாட்டைப் புசிக்குமரா வுக்குஞ்
சலியா நடம்புரிந்த தாணு - வலியாரை

௫௬. மோது மிருமழுவன் முக்கால ஞாற்கண்ணன்
வேதமைந்த ஞாறுதலை மேவினோன் - காத

௫௭. லெழுசமைய னெட்டுலகு மொன்பது திக்கும்
பழுதகலின் பத்து நிதியும் - தொழவருள்வோன்

௫௮. தன்புய வெற்பிடத்துந் தாட்டா மரையிடத்து
மென்பணி கொள்ளு மிராமேசன் - அன்பர்

௫௯. திகைத்த வினையுமயன் சென்னியுஞ்சே திக்கு
நகத்தன் வரராம நாதன் - சகற்பதியைப்

௬௦. பூசித் திருநாளு நம்மையென்று போதித்தோன்
மாசித் திருநாள் வருநாளிற் - பாசத்தாற்

---

௫௨. விடயமன்று இக்கார்முதலை. விடை - திருமால், விடுத்தல்; "ஊரும் விடைகருட னூரவிடை கொடுத்தார்" திருவிடைமருதூருலா, ௩௫௫.

௫௨ - ௩. திருமால் கண்ணனாக அவதரித்தபொழுது இடைக்குல மகளிர்பாற் பயின்றமை இங்கே யறியற்பாலது.

௫௪. சாரூபம் - செத்த உருவம், ஸாரூபம். பூசித்தவனைக் கடைக்கணித்துச் சாரூபங் கொடுத்தருளினரென்பது மற்றொன்று. [பதஞ்சலி.

௫௫. புலி - வியாக்கிரபாதர். ஆட்டை - ஆட்டினை, நடனத்தை. அரா-

௫௬-௭. ஒருமழு, இருகால், முக்கண், நால்வேதம், ஐந்துதலை, ஆறுசமயம், ஏழுலகம், எட்டுத்திக்கு, ஒன்பதுநிதி யெனவே இருத்தற் குரியவைகள் வேறு தொகைப்பொருள்களாகத் தொனிக்கும்படி இக்கண்ணிகளிற் கூறியிருத்தல் வியக்கற்பாலது; இருமழு - பெரியமழு. முக்காலன்-மூன்று காலங்களையுடையவர். ஆற்கண்ணன்-ஆலமரத்தின்கீழே எழுந்தருளியிருப்பவர். வேதமைந்தன்-வேதத்தை அருளிச்செய்த வலியையுடையவர்; மைந்து - வலி. ஆறு - ஆகாய கங்கை. எழு - எழுகின்ற. நெட்டுலகம் - நீண்டஉலகங்களையும். ஒன்பதுஉதிக்கும் - ஒன்பதாக உதிக்கப்பெற்ற. பழுதுஅகல் இன்பத்து நிதி - பழுதகன்ற இன்பத்தைச் செய்யும்நிதி. உலகையும் நிதியையும் அருள்வோன்.

௫௮. என்பணி - என்னுடைய பணிவிடை, என்பாகிய அணி.

௫௯. நகம் - மலை, உகிர். சகற்பதி - திருமால்.

௬௦. பூசித்திரு, ஏவல். பாசம் - அன்பு.

௬௧. பொற்கொடி மார்பிற் பொருந்தும் விடைக்கொடியா
நற்கொடி யேறு நலங்கண்டு - சொற்கொடிபோல்

௬௨. வாழும் பருவத வர்த்தனியுந் தானுமுல
கேழும் பரவ வெழுந்தருளி - ஆழியருள்

௬௩. காபாலிக் கென்றுகட்டு வித்த ரகுநாத
பூபாலன் மண்டபத்திற் போந்திருந்து - மாபாரச்

௬௪. செஞ்சடை யன்றித் திருப்புயஞ்சே ராளென்னு
நஞ்சடை வார்த்தைமிக நாணடைய - மஞ்சுதவழ்ந்

௬௫. தேறுகுழற் கங்கையா ளெந்தைபுயஞ் சேர்வதுபோற்
கூறு மபிடேகங் கொண்டருளி - ஈறு

௬௬. புரியாடை யோரெட்டும் புல்லாடை யொன்றுங்
கரியாடை யொன்றுங் களைந்து - துரைராசன்

௬௭. தென்னன் விசய ரகுநாத சேதுபதி
கன்ன னருள்பொற் கலைபுனைந்து - பின்னை

௬௮. இறைப்பொழுதுங் கங்கைதனை யீசைகா ணுமன்
மறைப்பதெனப் பொன்மகுடம் வைத்துக் - கறைக்கண்டன்

௬௯. காதி லிருவரிசை காத்திருந்து கேட்பனபோற்
கோதி லரவக் குழைசாத்திச் - சாதலற

---

௬௧. பொற்கொடி-திருமகள்; பொன்னுண். சொல்-புகழ். "புட்கொடி யைக் கொண்டு பொறிக்கொடிமார் பிற்கொண்மரைக், கட்கொடி யேற்றி" திருவிடைமருதூருலா, ௧௪௩.

௬௨. பருவதவர்த்தனி - அம்பிகையின் திருநாமம். ஆழி - சக்கரம்.

௬௩. ரகுநாதபூபாலன் - ரகுநாதசேதுபதியார்.

௬௨ - ௩. இவரைத் திருமாலாக உட்கொண்டு 'ஆழியருள்' என்றார்.

௬௬. ஓர் எட்டு - எட்டுத்திசைகள். புல் ஆடை-புலித்தோலாகிய ஆடை.

௬௫ - ௬. மூவகையாடைகளும் குற்றமுடையனவென்று நீக்கப்பட்டன வென்பது குறிப்புப்பொருள்.

௬௭. விசயரகுநாதசேதுபதி - இந்நூலாசிரியர் காலத்திருந்த அரசர்; "தருத்தேர் விசயரகுநாதன் றங்கத், திருத்தேர் வடமுகுர்த்தஞ் செய்ய" என்பர் பின்னும்; ௧௩௮.

௬௮. இறைப்பொழுதும் - சிறிதளவும். ஈசை - உமாதேவியார்.

௬௯. இருவர் - கம்பளர், அசுவதர ரென்பவர்கள். கேட்பனபோல் - கேட்பனவாகிய பாம்புகள்போல். பாம்பு இசையை அறிதற்குரியது; "காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டுபே, ரேதிலராய்க் காணு ரிரண்டுபேர் - பேதை முலை, உண்ணு ரிரண்டுபே ரோங்குபுலி யூரருக்குப், பெண்ணுன பேரிரண்டு பேர்" தில்லைக்கலம்பகம், ௮.

எ௦. அண்டர்க்கா வுண்டநஞ்சி லாரமுத மூறுதல்போற்
கண்டத்தின் முத்துவடங் கட்டுநீஇச் - சண்டன்போய்

எ௧. எட்டித் தொடுமுன் னிறுகச் சிவக்கொழுந்தைக்
கட்டிப் பிடித்தோன் கரம்போல - வட்டத்

எ௨. தினமணிக்கே காந்திதரும் செம்மல் புயத்தி
லினமணிக் கேயூர மிட்டுக் - கனல்விழியைத்

எ௩. தோண்டும் விரலைத் தொழவந்த சூரியன்போற்
காண்டகுமா ணிக்கக் கடகமிட்டு - வேண்டிவளர்

எ௪. மெய்யாண் முலைத்தழும்பை வேணியாள் காணுமற்
கையாள் பதக்கங் கவினுவித்துப் - பொய்யுலகில்

எ௫. தாயுதர பந்தனத்தைத் தள்ளுந் தனிமுதலுக்
காயுதர பந்தனமு மாங்கமைத்துத் - தேயம்

எ௬. பரித்தாளும் வாணன் பலசதங்கை யிட்ட
திருத்தாளி னூபுரமுஞ் சேர்த்தித் - தரித்த

திருச்சாந்தணிதல்.

எஎ. திருமா லொருபாலுந் தேவியொரு பாலும்
இருபாலுங் கைக்கொண்ட தென்னத் - திருமேனி

எ௮. ஆகாய மென்ன வகிலாண்ட மாந்தருவிற்
சேகாய வண்ணந் தெரிப்பதெனப் - பாகாய

எ௯. சானகி செங்கைத் தளிரும் பொருதுதிரு
மேனி நிறங்கன்றி விட்டதெனக் - கானகத்தின்

எ௦. சண்டன் - யமன். எ௧. கட்டிப்பிடித்தோன் - மார்க்கண்டேயர்.

எ௨-௩. தினமணி - சூரியன். கனல் விழியை - கனலுகின்றகண்ணை; "பகன்று மரைக்கண் கெடக் கடந்தோன்" திருக்கோவையார், ௧௮௪.

எ௪. மெய்யாள் - உமாதேவியார். வேணியாள் - கங்கை. கை - அலங்காரம்.

எ௫. உதரபந்தனம் - ஒட்டியாணம்.

எ௬. வாணன் - வாணாசுரன். பல சதம் கை - பலநூறாகிய கைகள்; ஆயிரம் கைகளையுடையவனாகிய வாணன் சிவார்ச்சனை செய்துவந்தவன். வாணன் சதங்கையணிகள் பலவற்றையணிந்த திருவடியென்பதும் ஒன்று.

எஎ. "ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி யுமைகொளவே, இருபா தியையு மிழந்தான் புராரி" தனிப்பாடல்.

எ௮. சேகு - வயிரம்.

எ௯. இராமநாதரது திருமேனி சீதையால் அமைக்கப்பெற்றது; சேது புராணம், இராமனருச்சனை, ௮௫-௯௦௬.

அ0. மண்டிப் பொருவிசயன் மன்னைப் பிடிபிடிக்கக்
கண்டத்தி னஞ்சு கலந்ததெனக் - கொண்டலார்

அக. தெள்ளுஞ் சிவத்தியானஞ் செய்போ திரண்டுருவு
முள்ளும் புறமு மொளிர்வதெனக் - கிள்ளைவளர்

அஉ. கையிற் கரும்பணிவாள் காத லெனுநீலப்
பையுட் பொதிந்த பவளமென - ஐயமறத்

அங. தூய சிவஞானந் தோன்று தெவரெவர்க்கு
மாயை நிழலின் மறைந்ததென - நேய

அச. மருக்கூந்தன் மங்கைநிறம் வாஞ்சித்தா ரென்னத்
திருச்சாந் திலேபனமுஞ் செய்து - விரைச்சாந்தாற்

அரு. சந்திரனில் வாழுந் தடந்தா மரைக்கண்ணன்
வந்தெதிர் நிற்கும் வடிவென்ன - முந்தியே

அசூ. விம்பப் பிரதிவிம்ப வேதாந்த நீதியெனப்
பைம்பொனிலைக் கண்ணுடி பார்த்தருளி - வெம்போரில்

அஎ. வானிற் பறக்கு மதின்மூன் றையுமெய்ய
மேனிற்கும் பொன்மேரு வில்லென்ன - வானத்து

அஅ. முந்திய விந்திரவின் மூன்றி லுமைநிறமும்
எந்தைநிற முங்கண் டிரண்டொளிக்க - நிந்தையிலா

அசூ. மற்றொருபொன் வில்லை வளைத்துத் தரித்ததெனப்
பொற்றிரு வாசி பொலிந்தோங்கக் - குற்றமறு

கூ0. சீரா தனமான சிங்கா தனத்திலிருந்
தாரா தனைகொண் டருளியபின் - யாரும்

அ0. மன்னை - கழுத்து; வழக்கு. கொண்டலார் - மேகம்போல்வாராகிய இராமர்.

அஉ. கையிற் கரும்பு அணிவாள் - உமாதேவியார்.

அச. இலேபனம் - பூச்சு. சாந்தால் - திருச்சாந்து அணிந்தமையால்; அது கருமையுடையது.

அரு. சந்திரமண்டலத்தில் திருமால் எழுந்தருளியிருக்கின்றனர்; இதனை, "ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ, பாற்கடலோ திங்களோ தங்கு மாவம் பலபலவா, மாற்கமு மாகிகின் றூர்மாதை நாதர் வளங்கொள் பம்பை, மேற்கரைக் கோயில்கொண் டார்புரஞ் சீறிய வங்கணர்க்கே" என்பதனுலுணர்க; திருவாமாத்தூர்க்கலம்பகம், சுக.

அஅ. இரண்டு - பச்சைநிறமும் சிவப்புநிறமும்.

கூ0 - கூக. யாரும் நந்தியால் அடங்கிநிற்க. சடங்கம் - ஆறுஅங்கம்.

கூக. மடங்கலெனு நந்தியான் மாயோ னடக்கு
நெடுங்கடல் போலடங்கி நிற்கச் - சடங்குஞ்சேர்

கூ௨. நான்மறையு முத்தமிழு நற்பே ரிரண்டுடையோ
னூன்மறையு முன்னே நுவன்றதற்பின் - மேன்முறையே

கூ௩. வாட்டிவிடுஞ் சென்மம் வரும்வழியைத் தாளிட்டுப்
பூட்டிவிடுஞ் சேதுப் புராணமுங் - கேட்டருளி

கூ௪. மெய்ந்நூற் றுறையின் விதிவழியே பூசிக்கும்
ஐந்நூற்றுப் பன்னிருவ ராரியரும் - இந்நிலத்திற்

கூ௫. றேற்றுமலை யத்தனையுஞ் சேதுபந்த மீதுகுடி
யேற்றுலக நாதமுனி யென்போனுங் - கூற்றதிர

கூ௬. ஆர்க்குங் கடறூர்த் தழிவி றிருநகரஞ்
சேர்க்கு மிராவாடு தேசிகனும் - நீர்க்கடலில்

கூ௭. ஆராமங் கோயில்குள மற்புதமாக் கற்பித்த
மாராம நாத வரமுனியும் - சீராமர்

கூ௮. மெய்யம் பலமாக வீற்றிருப்பார்க் கேற்றபணி
செய்யம் பலவாண தேசிகனும் - ஐயன்

கூ௯. சிவராச தானியுடன் தேவையையொப் பாக்குந்
தவராம நாதமுனி தானும் - புவனேசற்

௬00. காதவன்வாழ் கோபுரங்க ளட்டபந்த மாதிகள்செய்
மாதவனும் வேதவன மாமுனியும் - சீதைபுணர்

கூக. மாயோன் - இராமர்; இவர் கடலோசையை யடக்கினமை, இந் நூல், ௬௪-ஆம் கண்ணிக்குறிப்பா லுணரலாகும்.

கூ௨. முத்தமிழ் - தேவாரங்கள். பேரிரண்டென்றது, தென்னவன் பிரமராயர், மாணிக்கவாசகரென்பவற்றை. நூன்முறை - திருவாசகம்.

கூ௩. தாள் - திறவுகோல்; "இன்பப் புதாத் திறக்குந் தாளுடைய மூர்த்தி" சீவக. ௧௫௪௯.

கூ௫. சேது, சேதுபந்தமெனவும் சேதுவந்தமெனவும் வழங்கும்.

கூ௭. ஆராமம் - சோலை.

கூ௮. மெய்-மனத்தை; "வடிவங் கண்டே மெய்யொருப் பட்டதில்லை" திருவால. ௩0: ௩௧.

கூ௯. சிவராசதானி - ஸ்ரீகாசி.

௬00. 'ஆதிகள்' என்றதனால், வேதவன முனிவனால் வைப்பிக்கப்பெற்ற வேதவனச்சோலையும் கொள்ளப்படும்; "மாதவனும் வேதவன மாமுனிவன் வைப்பித்த, வேதவனத் தண்டலைமென் கூந்தலாள்" ௨௨௫.

கOக. மேகஞ் சொரிந்ததிலு மிக்காக நித்தமபி
டேகஞ் சொரிந்து தினம்பூசை - ஆகத்தின்

கOஉ. மைவார் வளையும் வனமுலையும் பெற்றேர்க்குத்
திவ்யா கமப்படியே செய்விக்கும் - சைவ

கOங. சிகாமணி யான சிதம்பர நாத
மகாமுனியு மாமெழுவர் வந்து - நகாதிகளைக்

கOச. கிண்ணன் முதலோர் கனசேது வைச்சேரப்
பண்ணுதல்போற் செய்யும் பணிவிடையும் - மண்ணுலகங்

கOரு. காத்தருளுஞ் சேதுபதி கட்டளையைச் சட்டமிட
வாய்த்தசொக்க நாத வரமுனிவன் - கீர்த்தியுடன்

கOசு. நம்பர் திருப்பணிக ளோடோறுஞ் செய்தனவுஞ்
சம்பு திருச்செவியிற் சாத்தியபின் - அம்பொற்

கOஎ. திருவாழி தாங்கலாற் சேரும் வடத்தாற்
பரிவான பீதாம் பரத்தாற் - திருவென்னு

கOஅ. மாது பதியுமவன் மாமகுட மும்போலுஞ்
சேதுபதி வைத்ததிருத் தேரேறிக் - காதலிதேர்

கOகூ. பின்னூரச் சண்டன்றேர் பின்னூர மைந்தர்தேர்
முன்னூர நீரேரு மூதூரில் - என்னிறையோன்

ககO. ஆதித்தேர் தானு மழகுக்குத் தோற்றிந்தச்
சோதித்தேர் தன்னைச் சுமப்பதென - வீதிக்

ககக. கெழுந்தருளும் போதி லிமையோர்கள் வெள்ளங்
கொழுந்து படர்ந்துவருங் கூட்டம் - தொழுந்தகைய

ககஉ. வள்ள லுடன் முன்வந்த வானரங்க ளோரொரு
வெள்ள மெனக்கலித்து மீண்டதென - ஒள்ளிழையார்

ககங. அன்று தனிப்போ யரன்விழிக்குத் தோற்றமத
னின்று படைக்கூட்ட மிட்டதெனச் - சென்றேடிப்

கOஉ. வளை - வளைத்தழும்பு. பெற்றமை, காஞ்சிப்புராணம், தழுவக்குழைந்த படலத்தாலுணரலாகும்; நடுசு - ஆம் கண்ணியைப்பார்க்க.

கOஎ - அ. திருமாலுக்கும் திருத்தேருக்கும் சிலேடை: ஆழி - சக்கரம்; உருளை. வடம் - ஆலிலை, தேர்வடம். திருவென்னு மாதுபதி - திருமால். திருமால்போலும் தேர்.

ககO. ஆதித்தேர் - பூமி.

கக௪. பேதைமையால் வாலி பிதாமிதித்த பூமிதனை
மேதினியோ ரெல்லா மிதித்ததெனக் - காதலுமை

கக௫. ஏடலர் தாரா ளிளனுக் கிடுஞ்சாப
மாடவர்க் கெல்லாமுண் டானதென - நீடுசடா

கக௬. தீர்த்த மொருசுகத்தின் சென்மந் துடைத்தமைகேட்
டார்த்தசுக மெல்லா மடைந்ததெனப் - பார்த்திருந்து

கக௭. சானகியை யீன்ற தலத்தைவெல்லப் பூவையரை
யேனை யிடமெல்லா மீன்றதென - மானெல்லாங்

கக௮. கோவங்க மானக் குத்தனை வஞ்சித்த
பாவங் கழுவப் படர்ந்ததெனக் - கோலங்கொள்

கக௯. தென்கடனீ ருண்ணச் செலும்போது சீமூத
மின்களையெல் லாங்கரையில் விட்டதெனத் - தன்கிளைபோற்

க௨௦. கொச்சை மயிலெல்லாங் கூட்டமிட்டு வெற்பீன்ற
பச்சை மயிலைவந்து பார்ப்பதென - அச்சுதனும்

க௨க. மூவர் பணிந்த முதற்றலமென் றுங்கவர்தம்
பூவையரெல் லாம்பணியப் போந்ததெனச் - சேவை தனிற்

க௨௨. பிந்தாது சூழவனப் பேடவர்கைத் தாமரையில்
வந்தாடல் போற்சா மரையாடத் - துந்துபி

க௨௩. சல்லரி தக்கை தடாரிமுர சம்பேரி
கல்லவடங் காகளங் கல்லென்னச் - சொல்லரிய

க௨௪. வெண்கவிகை யான்மறைந்து விண்ணிறம் வெண்ணிறமாய்
வண்கவிசொ னீலநிற மாறுடக் - கண்களெனும்

கக௪. வாலிபிதா - 'ரிக்ஷரஜஸ்' என்பவன். மிதித்த ஆடவர்கள் உடனே மகளிர் வடிவமடையும் இடமொன்றை மிதித்து அவன் பெண்வடிவமடைந்தான்; கூர்மபுராணம், அகத்தியர் இராவணன்மாபுரைத்தவத்தியாயம்,கக௬.

கக௫. சாபம் - பெண்வடிவமடைகவென்றது.

கக௬. சுகம் - கிளி, சுகமுனிவர்.

கக௭. ஈன்றதலம் - பூமியின் ஒரு பகுதி; ஏனையிடம் - பூமியிலுள்ள மற்றையிடங்கள்.

கக௮. கோ - அரசன். வஞ்சித்தபாவமென்றது, மாரீசன் மான் வடிவங்கொண்டுவந்து மயக்கியதை. கக௯. சீமூதம் - மேகங்கள். தன், சாதி

க௨க. மூவர் - இராமர், பலராமர், கண்ணபிரான். [யொருமை.

க௨௨. 'சூழ்' என்றதற்கு எழுவாய் கக௨-ஆம் கண்ணியிலுள்ள 'ஒள்ளிழையார்' என்றது.

க௨௪. ஆகாயம் நீலநிறமுடைய தென்பது கவிகளின் மதம்.

கஉரு. பொங்கலர் பூத்ததடம் போன்றமட வார்களட்ட
மங்கல மேந்தி மகிழ்வேந்தப் - பங்கயனும்

கஉசு. மாலும் பறவைகளில் வந்தேற வாசையிரு
நாலும் புரப்போர் நரர்விலங்கு - மேலேற

கஉஎ. எட்டிய கோள்க ளெழுபத் தொருகுதிரை
கட்டிய தேர்கள் கடிதேறக் - கிட்டுவினை

கஉஅ. பாறுமிரு நால்வசுவும் பன்னோ ருருத்திரரு
மேறு விமான மினிதேறச் - சீறயிலை

கஉகூ. எள்ளு மிருகண் ணெழுமட வார் நான்மூன்று
புள்ளும் விலங்கும் பொலிந்தேறக் - கிள்ளைமொழி

கங0. நேயத் திருமா னிலமா னிளம்பிடிமான்
காயத் திரிமான் கலைமானும் - தூயோர்

கஙக. எழுவர்நதி மாத ரெழுமுனிவர் மாதர்
வழுவி லெழுவரர மாதர் - பழிதீர்

கஙஉ. வசுமாத ரெண்மர் மகிதல மாதி
யசமான மாதரோ ரெண்மர் - இசைகதிரோன்

கஙங. கன்னியர் நால்வர் கடவுட் கலாநாதன்
பன்னியர் மூவொன் பதுமாதர் - சென்னியச

கஙச. மானவர் பெற்ற வறுபது மாதருட
னேனையரு மொய்த்தீண்ட வெம்மருங்கும் - மேனுளிற்

கஙரு. கோவ மொடுங்கரா வுண்ட குலமைந்தர்
மூவரையும் வாழ்வித்த மூவர்களுந் - தேவருக்கும்

கஉசு. ஆசை-திசைகள். நரவாகனமுடையோர்-நிருதியும் குபேரனும்.

கஉஎ. சூரியன் முதலிய ஒன்பது கோள்களின் தேர்களிற்கட்டிய குதிரைகள், முறையே, எ, க0, அ, அ, அ, க0, அ, சு, சு ஆதலின், 'எழுபத்தொருகுதிரை' என்றார்; கூர்மபுராணம், ஆதவர்கதிர்ச்சிறப்புரைத்த. கக-ங.

கஉகூ. எழுமடவார் - சத்தமாதர்கள்; நால்விலங்கும் மூன்றுபுள்ளுமென்க; எதிர்நிரனிறை.

கங0. இளம்பிடிமான் - இந்திராணி.

கஙக. எழுவர் அரமாதர் - அரம்பை முதலிய எழுவர்; 'எழுவாரமாதர்' என்றும் படித்தற்கிடமுண்டு.

கஙங. சூரியன் மனைவிகள் நால்வர் சஞ்சை, இராக்கினி, பிரபை, சாயையென்பார்; கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்த. ங - சு.

கஙங - ச. சென்னி அசமானவர் - தக்கன்.

கஙரு. கோவம் ஒடுங்கு அரா, கோவமொடும் கராவெனப் பிரித்துப்

௧௩௬. பேருலகத் தோர்க்கும் பிரம்படி யுண்டாக்கும்
ஓரிருவர் தாமு முடன்போத - நீரோடப்

௧௩௭. பண்ணியங் கொள்ளாது பார்முழுதுங் கொண்டாடப்
புண்ணியங் கொள்ளும் புகழாளன் - விண்ணோர்

௧௩௮. தருத்தேர் விசய ரகுநாதன் றங்கத்
திருத்தேர் வடமுகுர்த்தஞ் செய்யப் - பெருத்த

௧௩௯. மறுகு கடலாக மன்பதை வெள்ள
முறுகு கரைபுரண்டு மோத - நிறைவயிரக்

குழாங்கள்.

௧௪௰. கன்னிலத்து மின்னுசந்த்ர காந்த வணிநிலத்தும்
பொன்னிலத்தும் வைசயந்திப் பொன்னிலத்தும் - அன்னம்

௧௪௧. உலாநிலத்து மேனிலத்து மோர்நிலத்து மில்லா
நிலாநிலத்தும் வெள்ளி நிலத்தும் - கலாநிதியும்

௧௪௨. தாரா தரமு முதவுந் தரளமின்கள்
ஓரா யிரங்கோடி யுற்றவென - நேரிழையார்

௧௪௩. காதலுட னேறிடுவார் கைக்கடகந் தம்மையே
பாத கடகமெனப் பார்த்தணிவார் - சீதாதி

௧௪௪. பாடகத்தின் மீதே பரிந்தணியுங் கண்டசரம்
பாடகத்தின் மீதே பரிந்தணிவார் - நாடி

௧௪௫. இதங்கொண் மலர்நே ரிருகை யிடத்தே
சதங்கை தெரியத் தரிப்பார் - விதங்கொண்ட

௧௪௬. காலாழி கையாழி யாகக் கடிதணிவார்
மாலாழி நீந்த மறுகுவார் - நாலிடமு

பொருள் கொள்க ; கரா - முதலை. வாழ்வித்தமூவர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவர்.

௧௩௬. ஓரிருவர் - திருவாதவூரடிகள், அரிமர்த்தனபாண்டியர்.

௧௩௮. தருதேர் - கற்பகமும் ஆராயப்பெற்ற.

௧௪௰. வைசயந்தி - பெரியகொடி கட்டப்பெற்றதும் வீட்டின்முன்புறத்துள்ளதுமான மாளிகை.

௧௪௧. கலாநிதி - சந்திரன்.

௧௪௨. நிரனிறை.

௧௪௪. பாடகம் - பாடுகின்ற இடமாகிய கழுத்து; ஒருகாலணி.

௧௪௫. சதங்கை - ஓரணி. இரண்டுகைகளில் நாறுகைகளைத் தரிப்பாரென்றும் ஒன்று தோற்றும்.

கசஎ. மொய்த்திடுவார் மார்பு முறுகு முலைதாங்கி
யெய்த்திடுவார் வேர்வை யிறைத்திடுவார் ; தத்தம்
கசஅ. இடைகளையுந் தேடுவா ரெல்லோர் மடியும்
உடைகளையுஞ் சோதித் துடைவார் - விடையோன்
கசகூ. கனிவாயுந் தம்மிதழுங் கைவிரலாற் கூட்டத்
தனியாமை யாலே தவிப்பார் - இனிஇந்தப்
கரு௦. பெண்களையு மாண்களையும் பேசுந் திரைக்கரத்தாற்
கண்களைமூ டாதோ கடலென்பார் - எண்கொள்ளும்
கருக. எம்முடைய கொங்கை யிணைகளுக்கு மீசரே
உம்முடைய வில்லங்க மோயாதோ - எம்ம
கருஉ. திரவியமா நாணையழித் தீருமது நாண
வரையறை யாப்பதுக்கி வைத்தீர் - நிரைவளையார்
கருரு. கைவளையை நீக்கினீர் கண்ணுதலீ ரும்முடைய
பெய்வளையை நீக்கப் பெறுவீரே - ஐயரே
கருச. கொள்ளை விடமமுதாக் கொண்டீரே நீரெமக்குத்
தெள்ளமுத நஞ்சமேனச் செய்தீரே - துள்ளி
கருரு. விழமதனை வென்றீரே விண்பழுத்த வெள்ளைப்
பழமதனை வெல்லப் படாதோ - முழுமுதலீர்
கருசு. என்றென் றிரங்க விளநீ ரையுமுலையு
மொன்றென் றிருக்கு மொருபேதை - என்றும்

பேதை.

கருஎ. திருமகளார் சிந்தை தெளிய விளைய
மருமகளார் பெற்றெடுத்த வஞ்சி - விரக
கருஅ. வசப்படுவோர்க் கெல்லா மதன்கரும்பு போலக்
கசப்பு விளையாக் கரும்பு - பசப்புவிளை
கருகூ. தன்போல் விளங்கச் சரக்காமன் றேரிழுத்துத்
துன்ப முறாத சுகப்பிள்ளை - பின்பொற்றை

கருக. வில்லங்கம் - வில்லின் அங்கம்; வில் - மேரு; வேறுபாட்டுக் குண மென்பது மொருபொருள்; "சுமப்ப தென்கொ னீயிந்த, வில்லங்க மாம்பிறை யை வெங்கை புரத்தரனே" வெங்கைக்கலம்பகம், ருக.
கருஉ. 'உமது நாண்' என்றது, பாம்பை.
கருரு. பெய்வளை - அம்பிகை. கருரு. வெள்ளைப்பழம் - சந்திரன்.
கருஎ. இளைய மருமகளார் - இரதி.
கருகூ. 'தன்' என்றது மன்மதன் குதிரையாகிய கிளியை.

கசுO. மாவிற் றனித்திருந்து மால்கொண்டோர் பேய்கொள்ளக்
கூவத் தெரியாக் குயிற்பேடு - தாவிப்

கசுக. படியேழு மோடிப் படரச் சிறிதே
கொடியோடுங் காமக் கொழுந்து - துடியோடிப்

கசுஉ. போரம்பஞ் செய்யும் புகழ்க்காம வேடிருநாட்
காரம்பஞ் செய்யுமங்கு ரார்ப்பணம் - சேருங்

கசுங. களவுங் கொலையுங் கவுரியமுஞ் சூதும்
விளையுந் தமோகுண வித்து - வெளியதிரு

கசுச. நீற்றொளி பொங்குதிரு நீலகண்ட யாழ்ப்பாணர்
ஏற்றினு மேருத வின்னிசை - ஆற்றலால்

கசுரு. என்முடியென் றெண்ணி யிருப்பினு முன்முடியாப்
பொன்முடிபோற் கூடாத பூமுடியாள் - முன்னேன்

கசுசு. தலந்துதிக்கு மப்பருக்குச் சாக்கியர் பாலிற்
கலந்தளித்த நஞ்சனைய கண்ணாள் - நிலந்துதிக்கும்

கசுஎ. பைநாகம் போய்மறைத்த பைம்பொற் சிகரம்போன்
மைநாக நீரின் மறைந்ததுபோற் - கைநாக

கசுஅ. பங்கன் சடைமுடிமேற் பண்டா யிரமுகத்துக்
கங்கை யொளித்திருந்த காட்சிபோற் - செங்கணியின்

கசுகூ. சார்பி லொளித்திருந்த தக்ககன்போன் மிக்கமணி
மார்பி லொளித்த வனமுலையாள் - ஊரனுக்குப்

கஎO. பைம்பொன் திருமுருகன் பூண்டியி லேபறிபோஞ் [யாள்
செம்பொனெனப் போய்மீண்ட சீறெயிற்றாள் - கொம்பனை

கஎக. செய்யதொரு சித்திரத்திற் றீட்டுஞ் செழுங்கிளியைக்
கையி லழைத்தழைத்துக் கன்றுவாள் - மெய்யுறுகண்

கஎஉ. ணாடி நிழலுக் கமுதூட்டு வாளதுவுங்
கூடவமு தூட்டக் குனிந்துண்பாள் - நீடுதிரை

கசுஉ. போர் அம்பு அஞ்சு எய்யும்.

கசுங. கவுரியம் - கிரௌரியம்; குரூரத்தன்மை.

கசுசு. சாக்கியர்-சைனர்; திருவாலவாயுடையார் திருவிளை. ஙஅ: ருO.

கசுஎ-அ. பைநாகம் - சேடன். கைநாக பங்கன் - சிவபெருமான்.

கசுஅ. செங்கணி - காசிபனென்பவன் பரீக்ஷித்துவுக்குக் கொடுத்த

கசுகூ. ஊரன் - சுந்தரமூர்த்திநாயனுர். [இலந்தைக்கனி.

களங. மட்டித் தெடுத்த மணற்சோற்றைத் தாணெடுக்க
எட்டிக் கடலை யிறைத்திடுவாள் - கிட்டிய

களச. மாதவிப் பந்தர் மணப்பந்த ராவாவிச்
சீதளச்செந் தாமரையே தீயாகப் - பேதுருக்

களரு. கிஞ்சுக பத்திரமே கிட்டுஞ் சிருக்காக
வஞ்சுகங்கண் மந்திரஞ்சொ லந்தணரா - நெஞ்சுகந்த

களசா. புன்னை யரும்பு பொரியாகப் பூந்தேற
னன்னர்ச் சொரியு நறுநெய்யா - முன்னரிள

களஎ. வண்ட லயர்ந்த மணற்சோறு நல்விருந்தாக்
கொண்ட முரசங் குரைகடலாத் - தண்டலையில்

களஅ. தன்பாவை யான தமனியப் பாவைதனக்
கன்பா மணஞ்செ யமையத்துத் - தென்பூமி

களகூ. வாழ வருங்கந்த மாதனத்தைப் பொன்மேருத்
தாழவரல் போலுந் தடந்தேர்மேற் - சூழத்

கஅ0. தனுக்கோடி நீங்கு தனுக்கோடியான் வந்தான்
மனுக்கோடி யேழுண்டையான் வந்தான் - எனைக்காக்கும்

கஅக. மூவா முதல்வந்தான் முப்பத்து முக்கோடி
தேவாதி போற்றுஞ் சிவன்வந்தான் - மேவவரும்

கஅஉ. பாலாழி தூணியாக் கொண்ட பரன்வந்தான்
நீலாழி யில்வாழ் நிதிவந்தான் - மேலோர்கள்

கஅங. நந்தா வரராம நாத னெதிர்வந்தான்
வந்தா னென்றூதும் வலம்புரியும் - துந்துபியும்

கஅச. பின்னத் தொனியான பேரிப் பெருந்தொனியுஞ்
சின்னத் தொனியுஞ் செவிதூர்ப்ப - அன்னை

கஅரு. எழுவது கண்டெழுந்தா ளேழையர் பின்போய்த்
தொழுவது கண்டு தொழுதாள் - முழுவதும்

களங. மட்டித்து - சுழன்று, வீசி. [ஓமஞ்செய்வதற்குரிய ஒருகருவி.

களரு. கிஞ்சுக பத்திரம் - முள்ளுமுருங்கைப் பூவின்மடல். சிருக்கு -

கஅ0. தனுக்கோடி - கோடி உடம்புகள், ஒரு தீர்த்தம். மனுக்கோடி ஏழ் - ஸப்தகோடிமகாமந்திரம்.

கஅஉ. நீலாழி-கரியகடல்; நீல்-நீலம்; முதற்குறை; சேதுஉள்ளகடல்.

கஅச. சின்னம் - ஒருவாத்தியம். இதிற் பேரொலி சிறியவொலியென் பதுமொன்று.

கஅசு. பாதாதி கேசமெலாம் பாவை தரிசித்து
வேதாதி கேசவனை மேம்பட்டாள் - பேதைமற்

கஅஎ. றொன் றினையும் வேண்டாம லும்பர்கோ னங்கைமான்
கன் றினை வேண்டிக் கரைந்தழுதாள் - நின் றினையு

கஅஅ. மன்னே யுமைவிழியென் றம்மானு மம்மானைத்
தன்னேயத் தாலே தரித்ததுகாண் - பின்னவனும்

கஅகூ. தேற்றுமிள மான்கன்றைச் சென்னிப் பிறைக்கொழுந்தில்
ஏற்றி விடுவதிலு மிச்சைகாண் - கூற்றுவன்வே

ககூ0. ராணி யறுகை யபேட்சித் தவர்சாத்தும்
வேணி யறுகையது மேயுங்காண் - மாணிழையாய்

ககூக. பெம்மா னமரர் பெருமானம் மான்கோமா
னெம்மானம் மானையுனக் கீயுமோ - சும்மாது

ககூஉ. கண்ணருவி யோடக் கரைந்தழுவ தேனெனுமுன்
விண்ணருவி யோடுந்தேர் வேறகலப் - பெண்ணெதிரே

ககூ௩. வந்த விசையமதன் வாளியின் வாய்க்குவிருந்
திந்த விசையமையா தென்றகல - வந்த

ககூச. சூதம்பை ததும்புங் குழையா ளகன்றாள்
பெதும்பை யொருத்திகிளிப் பிள்ளை - பதங்கண்டு

பெதும்பை.

ககூரு. துச்ச மதனன் றொடுக்குங்காற் றோட்சரமுங்
கைச்சரமு மாகாக் கடிமுல்லை - அச்சமற

கஅசு. வேதாதி - பிரமர். இவள் மேம்பட்டமைக்குக் காரணம், அடிமுடியைத் தரிசித்தது.

கஅஎ. நின்று இனையும்.

கஅஅ. 'அன்னே' என்பதுமுதலியன தாயின்கூற்று. உமைவிழியென்று - உமைவிழி போல்வதென்று. அம்மானும் - சிவபெருமானும்.

ககூ0. ஆணி அறுகை - ஆணிவேர் அறுதல். வேணி அறுகை - சடையிலுள்ள அறுகம்புல்லை. [பரிநரி. சக.

ககூக. சும்மாது - சும்மா; "சும்மாது சிரந்தூக்கி" திருவிளையாடல்,

ககூஉ. ஏன் எனும் முன்-என்னவென்று தாய் சொல்லுமுன். அருவி - அருபத்தையுடையார்; இராமநாதர்.

ககூ௩. விசயம் - வெற்றி. இந்தவிசை - இந்தமுறை.

ககூச. பதம் - மலரும்பருவம், விரும்பும் பருவம்.

ககூரு. துச்சம் - இழிவு.

கூகூசு. நீளவரு நாளத்தி னேற்று முகந்தோற்றி
நாளை மலரு நளினமலர் - வேளை

ககூஎ. வெடிக்குமலர் மேற்றுயை விட்டு நடந்து
படிக்கு மடவன்னப் பார்ப்புத் - துடித்தோடித்

ககூஅ. தாவுமதன் றேர்முன்னே தாய்கூவத் தான்காவிற்
கூவு மதுரக் குயிற்பிள்ளை - பூவுலகிற்

ககூகூ. செல்லார் திருமருகற் றிங்களூர் வெவ்விடம்போற்
கொல்லாமன் மீண்டுவிடுங் கூர்விழியாள் - சொல்லும்

உ00. பெருந்தாளம் வேண்டாத பிள்ளையார்க் கீசன்
றருந்தாளம் போலுந் தனத்தாள் - வருந்தியே

உ0க. பேதமற வாகீசர் பெற்ற சிவபதம்போற்
கோதையர் கூட்டுங் குழலினள் - சோதிசேர்

உ0உ. பொற்கண்ட மான புதியமணி முற்றத்துக்
கற்கண்டு கொண்டு கரைகண்டு - சர்க்கரையாற்

உ0ங. பாத்தி பரத்திப் பசுந்தேன் குடங்கொண்டு
வார்த்து வளர்த்தசிறு மாதவிக்குப் - பூத்தறியாத்

உ0ச. தன்போ லிளங்கரும்பு தன்னையொரு கொள்கொம்பாப்
பொன்போலும் வஞ்சிநடும் போதத்தில் - இன்ப

உ0ரு. நலஞ்செய்யுங் கங்கை நதிவந்து நித்தம்
வலஞ்செய்யச் செய்யும் வழிபோல் - நிலம்பதிய

உ0சு. வண்டில் பதியு மணித்தேரி லெந்தைவரக்
கண்டில் கடந்தாள் கடிதடைந்தாள் - கொண்டல்போய்

உ0எ. முன்னம் பணிந்த முளரித் திருப்பதத்தை
மின்னும் பணிந்ததுபோன் மின்பணிந்தாள் - சென்னிமே

ககூசு. வேளை - காலம். [பாடல்.

ககூஎ. வெடிக்கும் மலர் - அலரும்பூ; "அந்தி வெடிமுல்லை" தனிப்

ககூகூ. திருமருகலில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராலும், திங்களூரில் திருநாவுக்கரசுநாயனாராலும் விடங்கள் தம்வேகங்குறைந்தமை இங்கே அறியற்பாலது.

உ00. பிள்ளையார் - திருஞானசம்பந்தர்.

உ0க. வாகீசர், திலதவதியாராற் சைவசமயத்தைச்சார்ந்து பேறுபெற்றமை இங்கே அறியற்பாலது.

உ0உ. கண்டம் - துண்டம். உ0சு. வண்டில் - தேருருளை; வழக்கு.
உ0சு. கொண்டல் - இராமர், மேகம்.

உ0அ. லாறுபிறை தோற்று மழகு மொருவேளை
நூறுவிழி தோற்று நுதலழகும் - கூறரிய

உ0கூ. வெண்டிசையுங் கொண்ட விடையழகு மேழுலகுங்
கொண்ட சிலையின் குனிப்பழகும் - கொண்டுவரு

உக0. மம்புயத்தி லொன்றையொளித் தாயன் றனைவேடன்
றம்பியெனச் செய்த சரணழகும் - கொம்பனையாள்

உகக. கண்டவளுங் காணு தவளுமாய்ப் பேராசை
கொண்டுங் கொளாதுமெதிர் கும்பிட்டாள் - அண்டர்கோன்

உகஉ. வேற்றோர் மறுகடைந்தான் வில்வே டொடைமடக்கித்
தோற்றா னெனும்பேர் துலக்கினன் - சாற்றும்

மங்கை.

உகங. திருப்பிறந்த நாட்பிறந்த தெள்ளமுதத் தாலே
யுருப்பிறந்த மங்கை யொருத்தி - தருப்பிறந்த

உகச. அண்ட மனையு மகிலமுமஞ் சுங்காள
கண்ட மனைய கருங்குழலாள் - தொண்டருடை

உகரு. அன்பிறை நீங்கா வடியான் முடிமேல்வாழ்
வன்பிறை போல்விளங்கும் வாணுதலாள் - என்பிறவிப்

உகசு. பேரூசல் மாற்றும் பிரானே டுமையாடுஞ்
சீரூசல் போலுஞ் செழுங்குழையாள் - ஆரூரிற்

உகஎ. கோன்கன் றினையாளுங் கோமான் கரத்தேந்து
மான்கன் றனைய வரிவிழியாள் - தான்கன்ற

உ0அ ஆறு பிறை - ஆறும் பிறையும். நூறு விழி - அழித்த கண். ஆறுபிறை, நூறுகண்களென்டன இதில் வேறொருபொருள்.

உ0கூ. சிலையின் குனிப்பு - வில்லைப்போன்ற புருவங்களின் வளைவு, "குனித்த புருவமும்" தேவாரம்.

உக0. ஆயன்-திருமால். வேடன்-கண்ணப்பர். ஆயனை வேடனுடைய தம்பியாகச் செய்ததென்பது இதிற் குறிப்புப்பொருள்; திருமால் சிவபிரான் திருவடியிற் கண சாத்தியது இங்கே அறியத்தக்கது.

உகஉ. தோற்றான் - தோல்வியுற்றான், கண்ணுக்குப் புலப்படான்.

உகங. தரு பிறந்த - கற்பகம் தங்கப்பெற்ற.

உகச. அண்ட மனையும் - அண்ட மாகிய இடமும்.

உகரு. அன்பு இறையளவும் நீங்காத.

உகஎ. கோன்கன்றென்றது மனுநீதிச்சோழருடைய குமாரராகிய வீதிவிடங்கரை; "சழக்கன்று கழுவாய் வேறே தகச்செய லாகின் செய்கை, வழக்

௨௧௮. மைபோற்றுங் கண்ணுமையாள் வாட்டங் திருத்துமரன்
கைபோற் சிவந்த கனிவாயாள் - வையமெலாம்

௨௧௯. ஈன்றவரை யீன்றகுறி யீதென்னப் பச்சடம்பு
தோன்றிய வேய்போலுந் தோளினாள் - ஆன்றபுகழ்ச்

௨௨௦. சேதுவிலுஞ் செம்பொன் வரையிலுஞ் சேர்கந்த
மாதனங்கள் போலும் வனமுலையாள் - ஓதியபொன்

௨௨௧. னாடமருங் கங்கை நதிமுடித்தார் கைப்பிடித்த
மாடமரு கம்போன் மருங்குலாள் - நாடு

௨௨௨. மதிக்கு மகத்தியனார் வாவிவந்த வேழத்
துதிக்கை யனைய துடையாள் - மதுக்கொன்றைப்

௨௨௩. பைந்தா மரைவணங்கிப் பச்சைமா லர்ச்சித்த
செந்தா மரையனைய சீறடியாள் - முந்தியதோர்

௨௨௪. தென்னிலங்கை நாபியாச் சேதுவரோ மாவலியாப்
பொன்னிலங்கு நற்சிகரம் பூண்முலையாத் - தன்னையுணர்

௨௨௫. மாதவனும் வேதவன மாமுனிவன் வைப்பித்த
வேதவனத் தண்டலைமென் கூந்தலா - மோதாழிப்

௨௨௬. பீடுறுகட் டேவையெனும் பெண்கொடியுந் தானுமா
வாடுதல்போற் பொற்பந் தடிக்குங்கால் - நீடாழி

௨௨௭. திண்கயி லாசமனஞ் செய்வோன் பணிந்தேத்தும்
வண்கயி லாச மனமுவந்தோன் - கண்கள்

கன்று தவிர்தி யென்னு மந்திர ருரைகொள் ளாதான், குழக்கன்று நிமித்தந் தன்சீர்க் குலத்தரு மருந்தா யுள்ள, மழக்கன்று தபத்தே ரூர்ந்த மனுவளித்தது சோணாடு'' பட்டீச்சுரப்புராணம், திருநாடு, ௨.

௨௧௯. ஈன்றவர் - சிவபெருமான்; அவர் திருநெல்வேலியில் மூங்கிலடியில் முளைத்தருளினமை இங்கே அறியற்பாலது.

௨௨௦. மேருவின் தென்பாலும் கந்தமாதனமென்று ஒருமலையுண்டு; கந்தபுராணம், அண்டகோச. ௩௧.

௨௨௧. நாடு அமரும். மா டமருகம் - பெரிய உடுக்கை.

௨௨௨. அகத்தியனார் வாவி - அகத்திய தீர்த்தம்; ௧௭ - ஆம் கண்ணிக் குறிப்பைப் பார்க்க.

௨௨௩. பைந்தாமரை - பசியமாலையையுடைய சிவபெருமானை.

௨௨௫. வேதவனத்தண்டலை - வேதவனமுனிவன் வைப்பித்த சோலை; ௧௦௦ - ஆம் கண்ணிக்குறிப்பைப்பார்க்க.

௨௨௬. கண் - இடம்.

௨௨௭. திண் கையில் ஆசமனஞ் செய்வோன் - அகத்தியமுனிவர்.

உஉஅ. கருபங் கடக்குமொரு காதற் கரும்பின்
மிகுபங் கடக்குதிரு மெய்யான் - தகைதீர்

உஉகூ. பரராம நாதனையும் பாலித் தருள்வோன்
வரராம நாதன் மகிழ்ந்து - சுரர்சூழ

உஙo. ஆதித்த னம்பொற் குடைமேற் குடையாகச்
சோதித்தன் பொற்றேரிற் றோன்றுதலும் - மோதும்

உஙக. பரவையிரச் சின்ன பரிசதிரா தென்ன
வுரவை யிரச்சின்ன மூத - விரைவெழுந்து

உஙஉ. தென்ன னடையாளஞ் சேருந் திருவிழியா
ளன்ன நடையா ளமலன்றேர் - முன்னின்

உஙங. றெளியன்னங் காணாத வொண்முடியை மற்றோர்
களியன்னங் கண்டதுபோற் கண்டாள் - கிளிதான்

உஙச. திடமான்முன் காணாத் திருவடியை மற்றோர்
மடமா னெதிர்காணு மாபோல் - நடமாடும்

உஙரு. பொன்னடியைக் கண்டு புகழ்ந்தா டிருவழகை
முன்னடியி னின்று முகந்துண்டாள் - பின்னை

உஙசு. மதனம் படாதோ வரிக்குயிலி னோசை
விதனம் படாதோ விளம்பீர் - முதனம்பி

உஙஎ. வந்தவளை முன்ன மதுரையினீர் போய்விற்ற
தந்த வளையுமக்குத் தந்தவளை - நொந்தவளை

உஙஅ. நாணுங் கலையு நலனுங் கலனுமருந்
தூணுங் கவர்ந்ததுமக் கொண்ணுமோ - வேணுமால்

உஉஅ. கருபம் - திசை. காதற்கரும்பு - உமாதேவியார். மிகு பங்கு [அடக்கும்.

உஉகூ. பரராம் அநாதரையும்.

உஙக. பரவை இரைச்சு-கடல்முழக்கம்; இரைச்சு, வழக்கு. வயிரச்சின்னம் - வயிரமழுத்திய சின்னம்.

உஙஉ. பாண்டியனுடைய அடையாளம் மீன்.

உஙங. அன்னம் - பிரமதேவராகிய அன்னப்புள்.

உஙச. மால் - திருமால். உஙரு. முன்னடி - அடிமுன்.

உஙசு. மதன் அம்பு அடாதோ. ஓசையால். விதனம் - வியஸனம். படாதோ - உண்டாகாதோ. [தந்தத்தாலாகிய வளையல்கள்.

உஙஎ. 'வந்தவள்' என்றது, தன்னைப் படர்க்கையாக்கி. தந்த வளை -

உஙஅ. வேணும் - வேண்டும்; "வேணுமாகில் வேணுமன்றி விரகெனக் கழன்றுதான், நாணுமாகில்" வில்லி. பாரதம். சூதுபோர். கசுரு.

உ௩௯. அந்தத் திருவணையி லன்பா விருக்கின்றீ
ரிந்தத் திருவணையி லீனமோ - சிந்தை

உ௪0. திகைத்தகன்று போல்வாளைச் சேர்ந்தருளீ ரென்ன
நகைத்தகன்று தேர்மே னடந்தான் - பகைத்திருந்த

உ௪௧. சேக்கை யகன்ற செழுங்குயின் மீண்டுவரிற்
காக்கையுங் காக்கை கருதுமோ - தாக்குங்

உ௪௨. கணைமேற் கிடத்தக் கருதுவாள் போற்பூ
வணைமேற் கிடத்தின ளன்னை - கணையால்

உ௪௩. தொடர்ந்துபொருங் காமனுக்குத் தோட்டுணையாய் வந்த
மடந்தை யொருத்திமலர் மங்கை - அடைந்தவருக்

உ௪௪. கீவினி லைந்தருவா மேகாம் பரநாதர்
மாவினில் வாழும் வரிக்குயில் - ஓவா

உ௪௫. திடைமருதூர் மேயார்க் கினிய நிழலாந்
தடமருதில் வாழுமிளந் தத்தை — பொடியாடிப்

உ௪௬. பால்வரையா மேனிப் பரமன் வரையான
மால்வரையில் வாழுமட மஞ்ஞை - நால்வரையாள்

உ௪௭. கூடற் குருமணிதன் கூட முளைத்தெழுந்த
வாடற் கடம்பி னமர்பூவை - நாடும்

உ௪௮. இணையிலி தேவை யிராம னடைத்த
வணையில் விளையாடு மன்னம் - பணியவெழில்

உ௪௯. காட்டுஞ் செருத்தணியிற் காலத் தலர்குவளை
யேட்டி லிருக்கு மிளஞ்சுரும்பு - நாட்டும்

உ௩௯. இந்தத்திருவானவள் அணைந்தால்.

உ௪0. திகைத்த கன்று - திகைப்புற்ற மான்கன்று.

உ௪௧. காக்கை கருதுமோ - காத்தலை நினையுமோ.

உ௪௫. கிள்ளை மருதமரத்திலிருத்தற்குரியது ; "வாழ்மருத வாழ்க்கை மதித்துறவு கொள்ளவந்த, கேழ்கிளர்செந் தார்ப்பசுங் கிள்ளையென" திருவிடைமருதூருலா, உ௫௫.

உ௪௪ - ௫. மாங்குயில், மருதக்கிள்ளை யென்பன வழக்கு.

உ௪௬. பால் வரையா - வெண்மை நீங்காத. மால்வரை - கைலை; கந்தமாதனமுமாம். மயில், குறிஞ்சிக்கருப்பொருள்.

உ௪௭. ஆடற் கடம்பு - வெற்றியையுடைய கடம்பமரம். பூவை - நாகணவாய்ப்புள்; கடம்புக் குரியது பூவை.

உ௪௯. செருத்தணி - திருத்தணிகைமலை. காலத்து - முக்காலங்களினும். அம்மலையிலுள்ள ஒரு சுனையில், காலை உச்சி மாலை ஆகிய மூன்று

உ௫0. மகோததி முத்த மணிப்பவளத் தோடு
சகோதர வாஞ்சை தரித்து - முகோதய

உ௫க. மாமதியில் வந்து மணியித மூக்கருகே
தாமதியா நின்றனைய தந்தத்தாள் - காமனையாள்

உ௫உ. அத்த னுமையவளுக் காக விரட்டைமுடி
வைத்த தனைய வனமுலையாள் - மத்தகசம்

உ௫௩. என்னப் படைத்த விளம்பிடி யானைநடை
தன்னைப் பழித்த தனிநடையாள் - துன்னும்

உ௫௪. அறல்போலுங் கூந்தற் கடர்சோலை நல்குந்
திறைபோன் மலர்கொய்யச் சென்றாள் - நறைகள்

உ௫௫. துடிபோலு மெல்லிடையாள் சொல்லுக்குத் தோற்றுக்
குடிபோவ தென்னக் குதிக்கப் - படியளிகள்

உ௫௬. பின்னின் றிரங்கப் பிணைமலர் கொய்யுங்காற்
பொன்னின்ற வானுலகும் பூவுலகும் - முன்னின்

உ௫௭. றொளிர்மணித் தேரேறி யும்பர் பெருமான்
கிளர்மணி வீதிவரல் கேட்டாள் - தளரும்

உ௫௮. இடையென்று மெண்ணு ளிறுக்கியுடுத் தாலு
முடையென்று நில்லாதென் றோராள் - தடையொன்றும்

உ௫௯. இல்லா தவர்போ லெழுந்தா ளிரண்டிருளும்
வெல்லா தவர்போலு மெய்வடிவும் - சொல்லாத

உ௬0. சந்திர சேகரமுந் தானு முமையவளு
மிந்திர சாப மெனுமழகும் - அந்தக்

உ௬க. கரும்புயல் வாழ்காள கண்டமுங் கங்கை
விரும்பி வளர்சடில மின்னும் - இரும்புவனி

காலங்களிலும் கருங் குவளை மலருமென்பர்; கந்தபுராணம், வள்ளியம்மை.
உஉஉ. ஏடு - இதழ்.

உ௫க. தாமதித்தல் - தங்கல்; வழக்கு.

உ௫௩. படைத்ததனி நடையாளென்க; "படியினெடுங்கிரி யனையமதங் கொடு பதறிடடங்கிடு மின்னரே", "நடையுமிந் திரவேழ மிருகையிந் திரதாரு நயனமிந் திரநீலமே" அருணைக்கலம்பகம், ௪0, ௫அ.

உ௫அ. உடையானது என்றும் நில்லாது.

உ௫௯. இரண்டிருள் - அகவிருள், புறவிருள்.

உ௬க. வாழ், உவமவுருபு.

உசுஉ. ஆதார மெய்யெல்லா மாகாய மென்பதனைக்
காதா லறிந்தவள்கண் ணுலறிந்தாள் - சோதி

உசுந. இழந்தா ளெழுகடலி னெண்மடங்கு காம
முழந்தாள் சிலரின் றுரைத்தாள் - தழைந்தலர்ந்த

உசுச. குற்றமறு கொன்றைக் குழகன் கடைக்கணித்து
மற்றமறு கொன்றை மருவினுன் - பொற்றபொறிக்

உசுரு. கோலத்து வண்டுதேன் கூட்டுண்ட பூமாலை
போலத் துவண்டு பொருமினுள் - சோலை

உசுசு. வருகாக வன்புள் வளர்த்தகுயில் கூவச்
சருகாக மெய்யுலர்ந்து சாய்ந்தாள் - அருகே

உசுஎ. மிகுந்த வரைமுலையார் மேவ விழியுட்
புகுந்தவரை யுட்கொண்டு போனுள் - தகுந்தவரைச்

அரிவை.

உசுஅ. சாதக ராக்கியந்தச் சாதகரைத் தான்வளர்த்த
மாதக ராக்க வருமரிவை - தாதுநிறை

உசுகூ. போது விரிகமலப் போதுபங்க முற்றதென்று
சேதுவில் வாழுந் திருமடந்தை - வேதத்

உஎ0. திறைவன் மணிநாவை யெச்சிலிது வென்று
மறைபயில் தேவையில்வாழ் வாணி - குறைதோன்ற

உஎக. வாசவன் மேனி வடுப்பட்ட தென்றிரா
மேசுரம் வாழவந்த விந்த்ராணி - மாசிலா

உஎஉ. அத்தனுக் கோடி யருந்தனுவீந் தோனையகன்
றித்தனுக் கோடிவந்த வின்பரதி - நெய்த்திருண்ட

உருக - சுஉ. ஸ்வாமியின் திருமேனியை ஆகாயமென்றதற்கேற்பச் சூரியன்முதலிய பொருள்கள் இவற்றிற்கூறப்பெற்றிருத்தல் காண்க.

உசுச. கொன்றைக் குழகன் - கொன்றைப் பூவையணிந்த இளமைப் பருவத்தை யுடையார். மற்ற மறுகு - வேறு வீதி. [துவட்சியுற்று.

உசுரு. கோலத்து வண்டு - அழகையுடைய வண்டுகள். துவண்டு -

உசுசு. காக வன்புள் - காக்கை. [தவரை - தக்க தவமுடையோரை.

உசுஎ. மிகுந்த வரை - மிக்கமலை. புகுந்தவர் - இராமநாதர். தகும்

உசுஅ. சாதகர் - உதவிசெய்பவர்கள். மா தகர்-பெரிய ஆட்டுக்கிடாய்.

உசுகூ. பங்கம் - சேறு, பழுது. உஎ0. இறைவன் - பிரமர்.

உஎஉ. அத்தனுக்கு - சிவபெருமானுக்கு. ஓடி அரிய உடம்பை ஈந்தோன் - மன்மதன்.

௨௭௩. கூந்தற் கருமணலுங் கோவா நகைமுத்துங்
காந்தி மதிமுகமுங் கட்கயலும் - வாய்ந்தகனி

௨௭௪. மூன்றையும் வென்ற மொழியமுத முங்காட்டித்
தோன்று மனையைத் துலக்குவாள் - தோன்றாத்

௨௭௫. திறலிக்கு வேளுக்குச் செங்கோல் கொடுப்பாள்
விறலிக்கு நோக்கருளும் வேளை - மறலிக்குக்

௨௭௬. கண்ணான் மகுடங் கவிக்குங் கனிமொழியைப்
பண்ணார் விறலி பணிந்திருந்தாள் - எண்ணிய

௨௭௭. மூவேழ் நரம்பு முறையே குரன்முதலாப்
பாவே ழிசையும் பயில்வித்துப் - பூவை

௨௭௮. முகநீ றிலங்க முளரியோ னாதி
சுகனீறாத் தெய்வந் தொழுது - மிகவும்

௨௭௯. இறும்பூ தெனச்சங் கிசையாதி யாகக்
குறும்பூ ழிசையிறுவாய்க் கூட்டிப் - பெறும்பாடல்

௨௮௦. எண்ணாற் றுறையி னிசைவாணர் கொண்டாடப்
பண்ணாற் றொருமூன்றும் பாடுங்கால் - கண்ணனவன்

௨௮௧. எய்தறுபத் தாறா யிரந்தெய்வ யாண்டுதவஞ்
செய்து வரம்பெற்ற சீர்பாடி - வையமுடன்

௨௮௨. கால முழுதழியக் கண்ணுதலைத் தாடேடி
ஞால முழுத நகைபாடி - மாலையாத்

௨௮௩. தோளிற் கிடந்த தொகைபாடிக் கண்மலரைத்
தாளிற் கிடந்த தகைபாடித் - தோளில்

௨௮௪. உதித்தமை பாடி யொருசூல நாவிற்
பதித்தமை வித்தமையும் பாடித் - துதித்துச்

---

௨௭௪. 'தோன்றும் மனையைத் துலக்குவாள்' என்றதனால், அரிவையைத் திருமகளென்றபடி; தோன்றுமனை - கடல். துலக்குவாள் - விளங்கச் செய்வாள்; இது பாண்டிநாட்டு வழக்கு.

௨௭௩ - ௪. இவற்றிற் கடலிலுள்ள பொருள்களையே உவமைகூறியிருத்தல் காண்க.

௨௭௫. திறல் இக்கு வேளுக்கு - மன்மதனுக்கு. [௨௧.

௨௭௭. மூவேழ் நரம்பு-இருபத்தொரு நரம்பில்; பேரியாழுக்கு நரம்பு,

௨௮௦. பண்கள் நூற்றுமூன்றென்பதைச் சிலப்பதிகாரத்தாலுணர்க.

௨௮௨. ஞாலம் உழுத. ௨௮௩. தாளிற்குக் கண்மலரை இடந்த.

௨௮௪. சூல நர் - சூலப்படையின் தலை.

உஅரு. சிறந்தமை பாடிநர சிங்கவெறி பஞ்சாப்
பறந்தமை யெவ்வெவையும் பாடி - அறந்தான்

உஅசு, வழுவு மிராவணனை மாய்த்த கொலையைக்
கழுவு மருள்பாடுங் காலைத் - தொழவந்தோர்

உஅஎ. பாரேழும் வெற்பேழும் பாய்பரியே ழுஞ்சூழு
நீரேழுங் காரேழு நேரார்ப்பப் - பேராப்

உஅஅ. பெருகு கனைகடலும் பேரியு மார்ப்ப
வருகுகனை யீன்றோன் வரலும் - கரியபிடிக்

உஅகூ. கன்று நடந்தருகே காமாரி யைத்தொழல்போற்
சென்று நடந்திருதாள் சேவித்தாள் - நின்றிறைவன்

உகூ௦. காயஞ் சிவந்த கவின்கண் டுருகினள்
தாயஞ் சிவந்தருகே தாங்கினள் - மாயன்றன்

உகூக. சின்ன மகன்றுன் றிருந்திழைமுன் றோன்றினன்
முன்ன மகன்றுன் முழுமுதலோன் - பின்னொருத்தி

தெரிவை.

உகூஉ. பேர்திகழ் பேரிளம் பெண்ணையெல்லா மாடவருக்
கூர்திக ளாக்கு மொருதெரிவை - பேரிருட்கும்

உகூங. நாடிய திங்களுக்கு நல்லறிவு வந்துறவு
கூடிய தன்ன குளிர்முகத்தாள் - நீடாழி

உகூச. பண்டு பிரிந்த பவளமு முத்துமெதிர்
கண்டுகலந் தன்ன கனிவாயாள் - பண்டைமக

உகூரு. மேருவு மந்தரமும் வெண்கயிலை போலீசன்
சேரு மிடமாய்ச் சிறந்திருக்கப் - பாரில்

உஅஎ. 'காரேழுநின்றார்ப்ப' என்றும் பாடம்.

உஅசு-எ. தொழவந்தோர் ஆர்ப்ப.

உஅஅ. வரு குகனை ஈன்றோன் - இராமநாதர்.

உஅகூ. காமர் அரி - அழகிய சிங்கம். உகூ௦. தாய் அஞ்சி வந்து.

உகூக. சின்ன மகன்-சிறியபிள்ளை; மன்மதன்; "சின்னவிடைப்பாகா" காசிக்கலம்பகம், எகூ; "பொறுத்தசின விடையாரும் பொருந்து சினவிடையாரும்" அருணைக்கலம்பகம், எக.

உகூஉ. பேரிளம் பெண்ணை யெல்லாம் - பெரிய இளைய பனைகளை யெல்லாம்; பேரிளம் பெண்களையெல்லாமென்பதுமொன்று. ஊர்திகளாக்கல் - மடல் மாவாகச் செய்தல்; இவளைக்கண்ட ஆடவர் மடலேறுவரென்றபடி.

உகூச. முத்து பற்களுக்கு உவமை.

௨௯௬. நிவந்தமுனை யூசியொன்றி னின்றிரண்டு வெற்புந்
தவஞ்செய் தனைய தனத்தாள் - சிவந்தவிரற்

௨௯௭. பத்துப் பவழங் கிளையும் பழமென்று
கொத்துங் கிளிபோலுங் கூருகிராள் - எத்திசையும்

௨௯௮. கால னடத்துங் கருமேதி யின்கொம்பு
போல நெரித்த புருவத்தாள் - ஆலவட்டம்

௨௯௯. கொப்பாக வேள்பிடித்துக் கொண்டாடும் பொன்னூச
லொப்பாக நின்றாடு மொண்குழையாள் - மெய்ப்பாகுஞ்

௩௦௦. செய்குன்றின் மேலிருந்து சேடியர் தற்சூழ
மொய்குன்றம் வென்ற முகிண் முலைக்கும் - பெய்கின்ற

௩௦௧. மஞ்சைப் பொருத மலர்க்குழற்கு மால்கொண்டார்
நெஞ்சைப் பொருததிரு நெற்றிக்குங் - கஞ்சந்

௩௦௨. தகுமான நீங்கவென்ற தாளுக்கு மன்று
வெகுமானஞ் செய்யும் விதம்போல் - நகையாய்த்

௩௦௩. துலங்காரஞ் சீதேவி சுட்டிசிலம் பாதி
யலங்காரஞ் செய்யு மளவில் - இலங்கிய

௩௦௪. கூவிரியால் விண்விரியக் கூரா ழிகள்பதிந்து
பாவிரி சேடன் படம்விரியத் - தேவருல

௩௦௫. கச்சாணி யந்தே ரணிகுடைக்கு மப்பாலே
கைச்சா ணிருசாணே காணுமென - முச்சகமுங்

௩௦௬. கோத்த மகமேருக் கூண்டனைய தேர்மீதில்
வாய்த்தமக தேவன் வரல்கேட்டாள் - பூத்த

---

௨௯௬. ஊசி, உரோமாவலிக்குவமை.

௨௯௯. "காழி, மெய்ப்பானை மேவியமாந்தர் வியந்தாரே" தேவாரம்.

௨௯௮ - ௯. கொப்பு - ஒருவகைக்காதணி; கொப்பு ஆலவட்டமாக.

௩௦௦-௩௦௩. தனத்திற்கு ஆரம், கூந்தற்குச் சீதேவி, நெற்றிக்குச் சுட்டி.

௩௦௧ - ௩. தகுமானம் - தக்க பெருமை. கஞ்சம் நீங்க. நகையாய் - பல்லையொத்து. ஆரம்-முத்தமாலை. சீதேவியென்பது தலையணிகளுள் ஒன்று.

௩௦௪. கூவிரி - தேர்க்கொடிஞ்சி. பாவிரி - பாக்களில் விரிந்த.

௩௦௪ - ௫. "அலர்கதிர் ஞாயி றூரு மணிநெடுந் தேர்க்கொ டிஞ்சி, விலகுற வதிற்குக் காமன் மேலள வொருசா ணிற்பப், பலர்புகழ் மணிமா டத்துப் பறக்குமொண் கிளியொ டுங்கி, னிலைசெரு கியபசும்பூந் தோரண மிசைய வார்த்தார்" (பிரபுலிங்கலீலை, சூனியசிங்காதனத்திலிருந்தகதி, ௯) என்பதை இக்கண்ணிகளின்பொருள் நினைப்பிக்கின்றது.

௩௦௬. கூண்டு - கூடு.

௫0எ. கமலங் கதிரோனைக் கண்டலரு மன்றே
அமலன் வரல்கேட் டலர்ந்தாள் - உமைபாகன்

௫0அ. புந்தியில் வாழப் புறந்தேடு மாந்தரைப்போல்
வந்தியர் சூழ மறுகடைந்தாள் - சந்தித்தாள்

௫0௯. சங்கங் கடைந்தணியுந் தாழ்குழைப் பெம்மானை
அங்கங் கடைந்தா ரயனிற்ப - வெங்கஞ்சன்

௫௧0. காட்டு மலரைவென்ற கண்ணன் கரமலர்
சூட்டு மலரைத் தொழுதிரந்தாள் - ஏட்டையுறும்

௫௧௧. அன்ன மறியாம லாகமெலா மென்பானீர்
பின்னைமால் வேதனையும் பெற்றீரே - முன்னியபே

௫௧௨. ராசை யுடையீரே யண்டருக்குத் தோற்றீரே
மாசு மதியைவெல்ல மாட்டீரே - யீசரே

௫௧௩. தென்றலோ வம்ம திருமேனி தீண்டிவிடு
மென்றலோ வெம்பணியெ லாமணிந்தீர் - வென்றி

௫௧௪. மதனை யெரித்தீரே மாதிடஞ்சேர் காம
மதனை யெரித்திடவொண் ணாதோ - விதனஞ்சேர்

௫௧௫. கொள்ளை விடமாங் குழலோசைக் காவேய்க்குப்
பிள்ளை புகுந்து பிழைத்தீரே - வெள்ளை

௫0அ. வந்தியர் - புகழ்ந்துபாடுவோர். ௫0௯. கஞ்சன் - கம்ஸன்.

௫௧0. காட்டு மலரை - காட்டியமல்லர்களை. கரமலர், எழுவாய். ஏட்டை - இளைப்பு.

௫௧௧. அன்னம்-அன்னப்பறவை, உணவிற்குரிய அன்னம். மால் வேதனையும்பெற்றீர் - திருமாலையும் பிரமதேவரையும் பெற்றீர்; உணவில்லாமையால் இளைத்தீர், மயக்கத்தையும் வேதனையையும் அடைந்தீரென்பது மற்றொரு பொருள்.

௫௧௨. ஆசையுடையீர் - திக்காகிய ஆடையையுடையீர்; இச்சையடையீர். அண்டருக்குத்தோற்றீர் - தேவருக்குப் புலப்படீர்; பகைவருக்குத் தோல்வியுற்றீர்.

௫௧௩. என்றலோ - என்றல்லவோ; அலோ - அல்லவோவென்பதன் மரூஉ; "என்கவிதை, இன்றலோ ராசசபைக் கேற்குநாள்" தனிப் பாடல். பணி - பாம்பு; அது காற்றைப்புசிப்பது; "நீரணிந்த வரவிருக்க நெடியதென்றன் முடுகுமோ" அருணைக்கலம்பகம், ௫௧.

௫௧௪. 'மாது' எனத் தன்னைப் படர்க்கையாற் கூறினள்.

௫௧௫. 'வேய்க்குப் பிள்ளைபுகுந்து' என்றது, திருநெல்வேலியில் மூங்கிலடியில் முளைத்ததனை; இதனால் சிவபெருமான் வேயின்றமுத்தென்று பாராட்டப்பெறுவர்.

௩௧௬. அயில்வாயி லுங்கொடிதென் றல்லவோ கூவுங்
குயில்வாய்த் தனைநெரித்தீர் கூறீர் - கயல்பாய்ந்

௩௧௭. திமைக்குங் கடலேழி லேகாந்த ராமன்
அமைக்குங் கடல்பார்த் தமர்ந்தீர் - உமைக்கொம்

௩௧௮. பிசையு மொருபா லிராதுவிடை யேறீ
ரசையுமணி யோசைக்கா வன்றே - திசைதோறு

௩௧௯. மாலைப் பொழுதடரும் வந்திப் பொழுதென்றே
காலைப் பொழுதையொரு கண்வைத்தீர் - ஞாலத்தில்

௩௨0. நும்ம விரக நுமக்கிவ்வா றுமாகி
லெம்ம விரகமெமை யென்செய்யா - திம்மெனவந்

௩௨௧. தாளீர் புயத்தி லணையீர் படுந்துயரங்
கேளீ ரெனநெருங்கிக் கிட்டுதலும் - வேள்போருந்

௩௨௨. தேராமல் மாலையருள் செய்யாமற் றேரானுந்
தாரானு நானென்றே தானகன்றான் - ஊரறிய

௩௨௩. அன்றுந் தனித்தா ளிலம்புகுந்தா ளவ்வாறே
யின்றுந் தனித்தா ளிலம்புகுந்தாள் - நன்றென்று

பேரிளம்பெண்.

௩௨௪. கைத்தகாய் தின்று கனியை முனிவார்தம்
பித்தகல வந்துதித்த பேரிளம்பெண் - பொய்த்த

௩௨௫. வலரை விரும்பா தரும்பை விரும்புஞ்
சிலரை மயறீர்க்குந் தெய்வம் - கலைமதியை

௩௨௬. விண்கூடு பாம்பருந்தி வெண்பிறையைத் தீண்டாமை
கண்கூடாத் தன்மேன்மை காட்டுவாள் - பண்கூட

௩௨௭. மூவரும் பாடு முதுதமி ழின்பத்தால்
மேவருந் தன்பருவ மேம்படுவாள் - காவிரிவாய்ச்

---

௩௧௭. ஏகாந்தராமன் அமைக்கும் கடல் - இராமர் ஒலியை அடக்கிய கடல்; அஃது ஏகாந்தராமகாத்தைச் சார்ந்தது; கச-ம் கண்ணிக்குறிப்பைப் [பார்க்க.

௩௧௮. அசையும் மணி - விடையின் கழுத்திற் கட்டியமணி.

௩௧௯. இப்பொழுது வந்து மாலைப்பொழுது அடரும். காலைப்பொழுது- [யுடையான், கொடான்.
சூரியன்.

௩௨௨. தேரான் - தேரை உடையான், அறியான். தாரான் - மாலையை

௩௨௫. கலைமதி - பதினாறுகலைகளையுடைய மதி; பூரணசந்திரன்.

௩௨௬. கண்கூடு-பிரத்தியக்ஷம். ௩௨௭. முதுதமிழ்-தேவாரங்கள்.

௩௨௮. சென்று திருவானைக் காவிற் சிவனைமதக்
குன்று வணங்கக் குனிந்ததோ - நின்றநிலை
௩௨௯. விட்டுத் திசைக்களிற்றை வெல்லவென்று காஞ்சிபுர
மட்டு மொருபயணம் வந்ததோ - இட்டிடைதான்
௩௩௦. என்று முறியா திருக்கத் தலைகீழா
நின்று தவஞ்செய்யு நீர்மையோ - வொன்றோடொன்
௩௩௧. றெய்யா வழக்கிட் டெதிரே மறிப்பிருந்து
பொய்யா நடுநிலையிற் போவதோ - கையாற்
௩௩௨. றகைந்த வடிக்கனத்தைத் தத்த முகங்கள்
பகுந்தெடுத்துக் கொண்ட படியோ - மிகுந்துவரும்
௩௩௩. தொண்டருக்கா மூர்க்கர் துணிந்தாடுஞ் சூதுகள்போய்ப்
பண்டு வயிற்றிற் படுப்பதோ - விண்டு
௩௩௪. புகழ்ந்திடும் போதுநின்ற போர்மா ருதிபோல்
முகங்கவிழ்ந்த கொம்மை முலையாள் - மகிழ்ந்துவரும்
௩௩௫. வேட்டுணை யாடவரை வென்று சயங்கொள்ளத்
தோட்டுணை தேடுந் துணைக்குழையாள் - நாட்டுறையும்
௩௩௬. மாந்தரையுந் தேவரையும் வாளமர் செய்வதற்குக்
கூந்தலரண் போய்ப்பார்க்குங் கூர்விழியாள் - வாய்ந்த
௩௩௭. பளிக்கு நிலத்தும் பதித்திடுகண் ணாடி
விளக்கு மொளிப்பசும்பொன் வீட்டும் - ஒளித்தொளித்துப்
௩௩௮. பூவைய ரன்பு பொருந்தவிளை யாடுங்கால்
தேவை யரன்பவனி செப்பினார் - பாவை

---

௩௨௮. மதக்குன்று - யானை.

௩௨௯. காஞ்சிபுரம் - காஞ்சிநகரம், காஞ்சியென்னும் ஆபரணத்தை யணிந்த இடை.

௩௩௧. எய்யா - இளையாத. மறிப்பு இருந்து - மறிபலிருந்து. நடுநிலை- இடையுள்ள இடம், நடுவுநிலைமை.

௩௩௨. பகுந்து - பங்கிட்டு.

௩௩௩. மூர்க்கர் - மூர்க்கநாயனார். விண்டு - இராமர்.

௩௩௫. வேள் துணை - மன்மதனையொத்த.

௩௩௬. கூந்தல் அரண் - கூந்தலாகிய காட்டரண்.

௩௩௮. தேவை அரன் - இராமநாதர்.

௲௩௯. பழுதாதல் கூருத பண்டை மறைபோ
லெழுதாத வேற்கண் ணிணையும் - எழுபிறவி

௲௪௦. வேலை யகன்று விடுஞ்சைவர் போன்றுதிரு
மாலை யகன்ற மலர்க்குழலும் - சீலமுறும்

௲௪௧. முன்னவரை வெல்லு முனைப்படைவேள் போற்கரும்பு
தன்னை வரையாத் தனதடமும் - மன்னினுள்

௲௪௨. என்ன விருக ணெழுதாண் மலர்முடியாள்
கன்ன லெழுதாள் கடிதெழுந்தாள் — அன்னங்கள்

௲௪௩. பின்பதறி வானைவிட்டுப் பேர்ந்தோடச் சென்றுளுள்
ளன்பதறி வானை யடிபணிந்தாள் - வன்பிலங்கை

௲௪௪. ஏற்றமுறு வேந்து மிருவர் முயலகருங்
கூற்றமு மஞ்சுங் குரைகழலும் - தோற்றுபுலி

௲௪௫. தான்முக னஞ்சு தளருந் திருவரையு
நான்முக னஞ்சு நகநுனியும் - கூன்முதுகுக்

௲௪௬. கச்சபமும் வெள்ளைக் கருமாவும் பச்சைநிற
மச்சமு மச்சமுறு மார்பிடமும் - உச்சமுறும்

௲௪௭. முப்புர மஞ்சு முறுவலுங் காமவே
ளப்புர மஞ்சு மணிநுதலு - மொப்புரையா

௲௩௯. எழுதாத - மை எழுதப்படாத.

௲௪௦. திருமாலை - விஷ்ணுவை, அழகிய பூமாலை.

௲௪௧. வரையா - எழுதாத, நீக்காத.

௲௪௨. கன்னல் - கரும்புத்தொய்யில்.

௲௩௯ - ௪௨. கண்ணிணைகளில் மையெழுதாள், குழலில் மலர்முடியாள், தனதடத்திற் கன்னலெழுதாளாய்.

௲௪௩. பின் பதறி. அன்பது அறிவானை.

௲௪௪. வேந்து - இராவணன். இருவர் முயலகர் - முயலகனென்னும் அசுரன், முயலை அகத்தேயுடைய சந்திரன்.

௲௪௫. முகன் நஞ்சு தளரும்-முகம் நைந்து தளருதற்குக் காரணமான.

௲௪௬. வெள்ளைக்கருமா - சுவேதவராகம்.

௲௪௭. அப்புரம் - அந்த உடம்பு; அழகிய உடம்பும் அம்பினது உரமுமாம்; புரம் - உடம்பு.

௫௪௮. மோகப் பணியு முதிர்பணியும் பாரிருளு
மாகத் திருளு மடர்விழியும் - லோகம்

௫௪௯. முடிச்சிட்ட நாளின் முகுந்தனயன் சென்னி
முடிச்சிட்ட மாலை முடியுந் - துடிச்சிட்ட

௫௫௦. விண்ணவ ரஞ்சுமந்த வெண்பொடிப் பூச்சுமன்ப
ரெண்ண வரஞ்சுமந்த வின்னருளுங் - கண்ணாரக்

௫௫௧. காண்டோறுங் காண்டோறுங் காயங் களிப்பெய்திப்
பூண்டோறும் பூண்டோறும் பூட்டவிழ்ந்தாள் - ஆண்டவரை

௫௫௨. மாற னடித்த மதுரையிலே யஞ்சாமல்
மாற னடித்த மதம்பாரீர் - நீறணியும்

௫௫௩. வெட்ட வெளியாரா மேனியா ரோரிடையன்
வெட்ட வெளியாராய் விட்டாரோ - முட்டவருள்

௫௫௪. தங்கலா லேறு தணவார்க்குச் சாக்கியனார்
தங்கலா லேறு சகித்ததோ - இங்கிவர்க்குக்

௫௫௫. கண்ணிடந் தப்புமெனக் காலா லுதைத்தொருவன்
கண்ணிடந் தப்புவதுங் காதலோ - பெண்ணமுதம்

---

௫௪௮. மோகப்பணி - மோகமாகிய பாம்பு. முதிர்பணி - முதிர்ந்த இராகுகேதுக்களாகிய பாம்புகள். பாரிருள் - புறவிருள். ஆகத்திருள் - அகவிருள். விழிகள் சோமசூரியாக்கினிகளாதலின், பணிமுதலியவை அஞ்சுவனவாயின.

௫௪௯. முடிச்சிட்டநாள் = முடித்திட்டநாள் - அழித்த காலம். முடிச்சிட்ட = முடித்திட்ட - கட்டிய. துடிச்சு - துடித்து. இட்டம் - இஷ்டம்.

௫௫௦. விண்ணவர்: அஞ்சும். எண்ண வரம் சுமந்த.

௫௫௪. ஆண்டவர் - சோமசுந்தரக்கடவுள்.

௫௫௨. மாற னடித்த மதுரை. மாறன் அடித்த மதம் - பாண்டியன் அடித்த செருக்கு.

௫௫௩. வெட்ட வெளியாராம் மேனியாரெனவும் வெட்ட எளியாராயெனவும் பிரிக்க; "வேயீன்ற முத்தர்தமை வெட்டினனேயிடையன்" என்பது இரட்டையர் பாடல். இடையன் வெட்டியது திருநெல்வேலியில் நிகழ்ந்த செய்தி.

௫௫௪. ஏறு தணவார்க்கு - இடபத்தை நீங்காதவர்க்கு. சாக்கியனார் தம் கல்லால் எறிந்தது.

௫௫௫. கண் இடம் தப்புமென. ஒருவன் - கண்ணப்பநாயனார். கண் இடந்து அப்புவதும். பெண்ணமுதம் - உமாதேவியார்.

௩௫௬. அங்கிதஞ் செய்ததுபோ லங்கைவளை யான்முலையா
லங்கிதஞ் செய்த தடுக்குமோ - இங்கிதந்தான்

௩௫௭. என்னென்று நைந்தா ளிறைவர் திருமேனி [றுங்
பொன்னென்றல் பூவென்றல் பொய்யென்றுள் - பின்னொன்

௩௫௮. கூறத் தரமன் றெனக்குழைந்தாள் கொன்றையின்மே
லாறத் தரமன்றென் ஞசையென்றுள் - மாறற்ற

௩௫௯. அம்புயத்தாள் போல்வா ளருளுமழ குங்கண்டு
செம்புயத்தாள் மாலை சிறிதளித்து - நம்பெருமான்

௩௬௦. பாரிறைவ னும்பர் பதியிறைவன் றென்றேவை
யூரிறைவன் போந்தா னுலா.

வாழி.

சேது நகர்வாழி தீர்த்தங்கள் வாழிகந்த
மாதனம் வாழிபர மன்வாழி - காதலித்தாய்
வாழி சிவசமயம் வாழிதலத் தார்வாழி
வாழிமனு வேந்தன் வளம்.

தேவையுலா முற்றிற்று.

இராமநாதர் திருவடித்தாமரைகள் துணை.

---

௩௫௬. அங்கு இதம் செய்ததுபோல். அங்கிதம் செய்தது - அடையாளஞ்செய்தது; "மைவார் வளையும் வனமுலையும் பெற்றோர்" என்றார் முன்னும்; ௧௦௨.

௩௫௭. 'என்னென்றுணைந்தாள்' என்றும் பாடம்.

௩௫௯. செம்புயத்து ஆள் மாலை.

இராமநாதர் துணை.

பிரகடனபத்திரம்.

(பழைய காப்பியங்கள்.) ரூ. அ.

பெருங்கதை மூலமும், குறிப்புரை முதலியனவும் 7 8
சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை பலவகைக் குறிப்புடன் (3-ம் பதிப்பு) 10 0
சிலப்பதிகார மூலமும், அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரை முதலியனவும் (2-ம் பதிப்பு) 8 12
மணிமேகலை மூலமும், அரும்பதவுரை முதலியனவும் (2-ம் பதிப்பு) 6 4
பத்துப்பாட்டு மூலமும், நச்சினார்க்கினியருரை முதலியனவும் (2-ம் பதிப்பு) 5 0

(எட்டுத்தொகையைச் சார்ந்தவை.)

ஐங்குறுநூறு மூலமும், பழையவுரை முதலியனவும் (2-ம் பதிப்பு)... 2 0
பதிற்றுப்பத்து மூலமும், ஷை ஷை ஷை ஷை ... 1 14
பரிபாடல் மூலமும், பரிமேலழகருரை முதலியனவும் ... 2 8
புறநானூறு மூலமும், அரும்பதவுரை முதலியனவும் (2-ம் பதிப்பு) 5 10

(இலக்கணம்.)

நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும் 3 2
நன்னூல் மூலமும், சங்கரநமச்சிவாயருரையும் 2 0
புறப்பொருள்வெண்பாமாலை மூலமும், அரும்பதவுரை முதலியனவும் (3-ம் பதிப்பு) 1 14

(வசனம்.)

மணிமேகலைக் கதைச்சுருக்கம் 0 10
உதயணன் சரித்திரச்சுருக்கம் 1 4
புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம் ... 0 12

(சைவ நூல்கள்.)

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் அல்லது வேம்பத்தூரார் திருவிளையாடல் அரும்பதவுரை முதலியவற்றுடன் ... 2 8
திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் ஷை ஷை ... 0 4
திருக்காளத்திநாதருலா ஷை ஷை ... 0 5
திருப்பூவணநாதருலா ஷை ஷை ... 0 5
திருவாவடுதுறைக்கோவை ஷை ஷை ... 0 6
திருப்பெருந்துறைப்புராணம் ஷை ஷை ... 1 4
மண்ணிப்படிக்கரைப்புராணம் ஷை ஷை ... 0 8
தனியூர்ப்புராணம் ஷை ஷை ... 0 2

வேண்டியவர்கள், சென்னை, திருவேட்டீசுவரன்பேட்டை, தியாகராஜவிலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.